# கந்தனே கலியுகத் தெய்வம்

## தமிழறிஞர் கே.வி.குணசேகரம்

விற்பனையாளர்

லங்கா புத்தகவிலை (தனியார்)

வரையறுக்கப்பட்டது

F.L- 1 – 14 டயஸ்பிளேஸ்

குணசிங்கபுர

கொழும்பு 12

தொலைபேசி இல : 011-2341942

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கந்தனே கலியுகத் தெய்வம் |
| ஆசிரியர் | : | கே.வி. குணசேகரம் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பு | : | |
| வெளியீடு | : | 2015 |
| அச்சிட்டோர் | : | தேவி அச்சகம், கொழும்பு 11 |
| விநியோகம் | : | லங்கா புத்தகசாலை, F.L. 1/14, டயஸ்பிளேஸ், குணசிங்கபுர, கொழும்பு – 12 |
| தொ.பேசி | : | 011-2341942 |
| தொ.நகல் | : | 011-2459431 |
| விலை | : | |
| ISBN | : | |

# என்னுரை

சைவ சமயத்தையும், சைவசமயத் தெய்வங்களையும் அதன் வழிபாட்டு முறைகளையும் முழுமையாக ஆராய வேண்டும் என்ற எண்ணம் பத்து வருடங்களுக்கு முன் எனக்குத் தோன்றியது. அதன்படி விநாயகர், சிவன், மகாவிஷ்ணு சூரியன் பெண் தெய்வங்கள் பற்றிப் பல்வேறு நூல்களில் வெளிவந்த தகவல்களைத் திரட்டி நூல்களாக வெளியிட்டேன். முருகனைப் பற்றி முழுமையாக ஆய்வு செய்ய வேண்டுமென நினைத்து “பிரமமாய் நின்ற சோதி” என்ற பெயரில் ஆய்வு செய்து வெளியிட்டேன். அது முருகனது திரு விளையாடல்களைக் கதைகளாகக் கூறுவது அது ஆய்வு நூல் என்ற போதும் முழுமை பெறவில்லை என்ற எண்ணம் எனது மனதில் எழுந்தது. சிறுவர்களும் பாமரமக்களும் சமய உண்மைகளையும் தத்துவங்களையும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக அதைக் கதைகளாக எழுதினேன். நான் நினைத்தது வெற்றியளித்தது.

இது முருகனைப் பற்றிப் பல்வேறு அறிஞர்களின் முடிவுகளைச் சொல்லும் நூல். என்னால் முடிந்தவரை தகவல்களைத் திரட்டினேன். அதைக் கட்டுரையாக எழுதிய போது சந்நிதியான் ஆச்சிரமம் வெளியிடும். ஞானச்சுடர் என்ற சஞ்சிகை அதை வெளியிட்டது.

பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் அதை வாசித்து விட்டுத் தாம் பௌத்திரமாகப் பேணி வைத்து மனக் குழப்பங்கள், பிரச்சினைகள் , நோய்கள் வரும்போது வாசிப்பதற்குதவியாக அதை நூலாக்கும்படி வேண்டினர். அவர்களது வேண்டுகோள் நான்கு வருடங்களின் பின்பு தான் நிறைவேறுகிறது.

சமயம், இலக்கியம் சார்ந்த பல்வேறு வகையான நூல்களை நான் வெளியிட்டுள்ளேன். நான் எழுதும் நூல்கள் இது வரை யாராளும் எழுதப்படாதவை. திருக்குறள் கதைகள், திருவருட்பயன் கதைகள், பகவத்கீதைக் கதைகள் திருமந்திரக் கதைகள் எனப்பல. இவற்றைத் தமிழ் நாட்டு ஆதீனங்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பொதிகைத் தொலைக்காட்சிச் சேவை என்பன விமர்சித்துள்ளன. ஒவ்வொன்றும் மிகமிகச் சிறந்த நூல்கள் என்பது அவைகளின் கருத்தாகும். ஆனால் இலங்கையில் விமர்சிப்பாரில்லை. சைவ சமயத்திற்குப் பெருந்தொண்டாற்றுவதாகக் கூறுபவர்கள் இதில் மௌனம் சாதிப்பது ஏன்? திருவாவடுதுறை ஆதினம் மிகச் சிறந்த சைவசித்தாந்த நூல்கள் என்று கூறப்பட்ட நூல்களுக்கே பரிசோ, சான்றிதளோ வழங்க யாரும் முன் வரவில்லை. எனது நூல்கள் அனைத்தையும் லங்காபுத்தகசாலையில் எப்போதும் பெறலாம். ஆனால் இலங்கை அரசு சென்ற வருடம் பரிசு கொடுத்த நூலைப் பெறமுடியவில்லை. எந்தவொரு நூலகத்தில் எனது நூல்கள் குறைந்தது

இருபத்தைந்தாவது இருக்கும். விமர்சிப்பது மகிழ்வுக்கென பலர் நினைக்கிறார்கள். ஆனால் நான் குறைகளைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இந்நூலைக் கணனியில் வடிவமைத்துத் தந்த செல்வி க. கல்ப்பனாவுக்கும் , செல்வி ப. யாழினிக்கும், இந்நூலை நாடெங்கும் விற்பனை செய்து தரும் லங்காபுத்தகசாலை அதிபர் திரு கந்தசாமி இராஜேந்திரனுக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன். எனது நூல்களை லங்கா புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

எனது நூல்களை KUNASEGARAM VAITHTHILINGKAM என்ற முகநூலிலும், www.gunasegaram.com என்ற இணையத்தளத்திலும் வாசிக்கலாம்.

கே.வி குணசேகரம்,
குணம் பதிப்பகம்,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
இலங்கை.

# அணிந்துரை

கந்தனே கலியுகத் தெய்வம் என்ற ஆய்வுக்கட்டுரை சந்நிதியான் ஆச்சிரமம் வெளியிடும் ஞானச்சுடர் என்ற சஞ்சிகையில் தொடராக வெளிவந்தது. சந்நிதியான் ஆச்சிரமம் சைவப்பண்பாட்டு விழுமியங்கள் அத்தனையையும் நிறைவு செய்யும். அபூர்வமான ஆச்சிரமம். அடியவர்களின் வயிற்றுப்பசியை அறுசுவை உணவு மூலம் பூர்த்தி செய்கிறது. அடியார்களின் அறிவுப் பசியை ஞானச் சுடர் என்ற சஞ்சிகை மூலம் பூர்த்தி செய்கிறது. அத்துடன் சைவஏழை மக்களுக்குத் தன்னாலான சேவைகளைச் செய்கிறது.

சந்நிதிக்கந்தன் வலிமைமிக்கவன், அடியவர்க்கு எளியவன். நம்பி வணங்கும் அடியவர்களை ஏமாற்றாது அள்ளிக் கொடுப்பவன். அதனால் தான் அவனது சந்நிதிக்குத் தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் செல்கிறார்கள். கந்தன் தான் கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் என்பது சைவ மக்களது ஏகோபித்த கருத்து. அதை உறுதி செய்திருக்கிறார் திரு கே.வி குணசேகரம் அவர்கள் தான் எழுத எடுத்துக் கொண்ட விடயத்தைப் பல்வேறு நூல்களை வாசித்து அதை உறுதி செய்த பின்பே எழுதுவார். அவர் எழுதும் விடயங்களைப் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். கந்தனே கலியுகத் தெய்வம்

என்பதை நிறுவ அவர் ஏராளமான நூல்களை உதாரணங்கள் காட்டியுள்ளார். அத்துடன் சிந்து வெளியிலிருந்து அண்மைக்காலம் வரை முருகவழிபாடு நடைபெற்ற வரலாற்றையும் மிகவும், விரிவாகவும் விளங்கக் கூடியதாகவும் எழுதியுள்ளார். முருகனுடைய படைக்கலமான வேல் அவனது வாகனமான மயில், கொடியிலமர்ந்த சேவல் ஆகியவற்றின் வரலாறும் பெருமைகளும் பல்வேறு நூல்களில் இருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூல் முருகனது பெருமைகள் அனைத்தையும் இலகு மொழியில் கூறுவதால் எழுதவாசிக்கத் தெரிந்த அனைவருக்கும் விருந்தாக அமைந்துள்ளது. அத்துடன் முருகனது பெருமைகளை அறிந்து கொள்ளக்கூடியதாகவும் அமைந்துள்ளது. இன்று உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் முருகனையே தமது குலதெய்வமாக எண்ணி வழிபடுகின்றனர். அத்துடன் கந்தசஷ்டி விரதகாலத்தில் மட்டுமன்றித் தினமும் கந்தசஷ்டிக் கவசத்தை ஓதிப்பயன் பெறுகின்றனர். அவர்களெள்ளோரும் முருகனது பெருமைகளை அறியவைத்த ஆசிரியர் பெருமைக்குரியவர். இவர் சைவசமய நூல்களான வேதங்கள், உபநிடதங்கள், திருவருட்பயன், சிவஞானபோதம் போன்ற நூல்களில் உள்ள தத்துவங்களுக்குக் கதைகள் எழுதியவர் திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டப்பட்டவர். இவரது மாயை பற்றிய தத்துவக் கதைகள் திருவருட்பயன்

கதைகள் என்பன திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டுப்பெற்றவை. அதைவிட பகவத்கீதைக் கதைகள், திருக்குறள் கதைகள், திருமந்திரங்கதைகள், என்பன பல அறிஞர்களின் பாராட்டைப் பெற்றவை. முருகனை வணங்கும் ஒவ்வொரு அடியவர்களும் கட்டாயமாக வாசிக்கவேண்டிய நூல் இது. இதில் சிவனைப்பற்றியும், உமையைப்பற்றியும், மஹாவிஷ்ணுவைப் பற்றியும், விநாயகரைப்பற்றியும் பல அரிய தகவல்கள் கூறப்பட்டுள்ளன. இவையெல்லாம் மக்கள் அனைவரும் அறிந்து கொள்ளவேண்டிய கருத்துக்களாகும். இதுபோல இன்னும் பல நூல்களை எழுதி வெளியிட முருகன் அருள்புரிதல் வேண்டும்.

சு.உதயபாலன். M.A. சைவசித்தாந்தம்,
இந்துசமய கலாச்சார உத்தியோகத்தர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

1

# கந்தனே கலியுகத் தெய்வமே

மனிதன் தோன்றிய காலம் முதல் கடவுளை வணங்கிவருகிறான். அதற்குப் பயம் தான் காரணம் என்று ஆய்வாளர்கள் சொல்கின்றனர். பயத்தினால்தான் மனிதன் தன்னைப் பயமுறுத்தும் பொருட்களை வணங்க ஆரம்பித்தான். அத்துடன் தனக்கு பிரதியுபகாரமின்றி உதவி செய்யும் பொருட்களையும் நன்றிப்பெருக்கோடு வணங்கினான். இயற்கை மனிதனைப் பயமுறுத்தியது. இடி முழக்கம், பெருமழை, மின்னல், இடிவிழல், ஆற்றுப்பெருக்கு, நிலநடுக்கம், சூறாவளிக் காற்று என்பன மனிதனைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன. அதனால் அவன் இயற்கையை வணங்கினான். இந்த வகையில் தான் கடவுள் வணக்கம் உருவாகியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆரம்பத்தில் மனிதன் அலைந்து திரிந்தான். பின் ஓர் இடத்தில் குடிசைகளை அமைத்து வாழத் தொடங்கினான். அப்படிக் குடிசைகளை அமைத்து வாழ்ந்த ஓர் இடம் சிந்துவெளி என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிந்துவெளி நகரங்களான மொகஞ்சதாரோ, ஹரப்பா என்ற நகரங்களில் வாழ்ந்த மக்கள் வேதகாலத் தெய்வங்களை

வணங்குவதற்குப் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர்கள். அங்கு ஆராய்ச்சியாளர் கண்டெடுத்த எச்சங்களில் இருந்து அவர்கள் பெரும் நாகரிகம் உள்ளவர்களாக வாழ்ந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாடிவீடுகளை அமைத்து ஆடம்பரமாக அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறுவதைக் கேட்டால் வியப்புண்டாகும். அங்கு கடவுளை வழிபட்டமைக்கான அறிகுறிகளாகத் தெய்வச் சிலைகள் பலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றி விரிவாக ஆராய்வது எனது நோக்கமல்ல. முருகனைப் பற்றி ஆராய்வதே நோக்கமென்பதால் ஆதிகால வரலாற்றைச் சற்றுத் தொட்டுச் செல்கிறேன்.

மத்திய ஆசியாவில் இருந்து ஆப்கானிஸ்தான் அல்லது ஈரான் வழியாகச் சிந்துவெளிக்குள் நுழைந்து சிந்துவெளியில் குடியேறிய மக்கள் தாம் ஆரியர். அவர்கள்தான் இந்துமதத்தைத் தோற்றுவித்ததாக வரலாறு கூறுகிறது. அவர்கள் வேதங்களையும் இந்து மதத்தையும் அதற்கான வணக்க முறைகளையும் உருவாக்கியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வேதம் எப்போது உருவானது என்று யாரும் இதுவரை அறுதியிட்டுக் கூறவில்லை. மார்க்முல்லர் என்ற மேல்நாட்டு அறிஞர் கிறிஸ்து பிறப்பதற்கு 1200 வருடங்களுக்கு முன்பே வேதப்பாடல்கள் உருவானவை என்று கூறுகிறார். இந்திய அறிஞரான திலகர், கிறிஸ்து

பிறப்பதற்கு 4000 வருடங்களுக்கு முன்பு வேதப்பாடல்கள் உருவாக்கப்பட்டன என்று கூறுகிறார். இருப்பினும் வேதங்களை நான்காக வகுத்தவர் வேதவியாசர் என்று அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

வேதவியாசர் தான் இதிகாசமான மகாபாரதத்தை எழுதியவர் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்குமிடையே 18 நாட்கள் மகாபாரதப்போர் நடைபெற்றது. இப்போர் கிறிஸ்து பிறப்பதற்கு 1900 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பாரதத்திற்கும் வேதத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அத்துடன் வேதத்தின் இறுதிப் பகுதியாகக் கருதப்படும் உபநிடதங்களில் ஒன்றான பகவத்கீதை மகாபாரதத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் வேதங்கள் கிறிஸ்து பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டன என்ற முடிவுக்கு ஆய்வாளர் வந்துள்ளனர்.

வேதகாலத்தில் 33 தெய்வங்கள் வழிபடப்பட்டன. இவற்றுள் முக்கிய தெய்வங்களாக இந்திரன், அக்கினி, வருணன், சூரியன் ஆகியோர் வழிபடப்பட்டனர். அக்கினி,வருணன், சூரியன் என்ற தெய்வங்கள் வேதகாலத்திற்கு முன்பு வாழ்ந்த மக்களாலும் வணங்கப்பட்ட தெய்வங்களாகும். இயற்கை என்ற பெயரில் வணங்கப்பட்ட தெய்வங்கள் பின் ஆரியரால்

வேதத்துக்குள் புகுத்தப்பட்டன. உருத்திரன், மகாவிஷ்ணு போன்ற தெய்வங்கள் வேதகாலத்தில் வணங்கப்பட்ட போதும் அவற்றிற்குப் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. வேதப்பாடல்கள் யாவும் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுமாறு கடவுள்களைக் கோருபவையாக உள்ளன. அத்துடன் மக்களுக்குப் போதிய அளவு உணவு தரும்படியும், தமக்கு உணவு தரும் பசுக்களைக் காப்பாற்றுமாறும் கோரிக்கை விடுகின்றன.

இருக்குவேதம் மக்களைக் காப்பாற்றும்படியும், மக்களின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யும்படியும் கோரிக்கையிட, யசுர்வேதம் மக்களின் நல்வாழ்விற்காகச் செய்யப்படும் சடங்கு வகைகளைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. மக்களுக்காகச் செய்யப்படும் சடங்குகள் எவையென்றும், அரசர்களினால் மட்டும் செய்யப்படும் சடங்குகள் எவையென்றும், அவற்றைச் அவ்வாறு செய்வதால் உண்டாகும் பயன்கள் எவையென்றெல்லாம் மிகவும் விரிவாக யசுர்வேதம் கூறுகிறது.

மூன்றாவது வேதம் சாமவேதம். இதிலுள்ள பெரும்பாலான பாடல்கள் இருக்கு வேதத்திலிருந்து எடுக்கப்பட்டவை. இசையுடன் பாடும் பாடல்கள் இவை. சாமவேதப்பாடல்கள் யாவும் மிகவும் இனிமையானவை.

மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுபவை. இதனால் இதை சாமகானம் என்றும் அழைப்பர்.

நான்காவது வேதம் அதர்வன வேதம். இந்த வேதத்தை அறிஞர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. மந்திர தந்திரங்கள், பில்லி, சூனியம், நோய் நீக்கம் பற்றிய பாடல்கள் இவ்வேதத்தில் உள்ளன. இதைப் பின் வந்தவர்கள் ஏற்றுள்ளமையால் வேதங்கள் நான்கு என்று சொல்லப்படுகிறது.

மனிதன் மூன்று பொருட்களால் ஆனவன் என்கிறது இருக்கு வேதம். உடம்பு, உயிர், ஆத்மா என்பவையே அம்மூன்று பொருட்களும். தைத்தீரிய உபநிடதம் மனிதனுக்கு ஐந்து நிலைகள் இருப்பதாகக் குறிப்பிடுகிறது. அன்னநிலை, பிராணநிலை, மனோநிலை, விஞ்ஞானநிலை, ஆனந்தநிலை என்பனவே அந்த ஐந்து நிலைகளுமாகும். இவ்வைந்து நிலைகளுள் அன்னநிலை உடம்பாகும். பிராணநிலை உயிராகும். மனோநிலை ஆன்மாவாகும். விஞ்ஞானநிலை அறிவாகிய ஞானமாகும். ஆண்டவனோடு கலப்பதால் உண்டாகும் நிலை ஆனந்தநிலையாகும்.

உலகில் பிறந்து துன்பங்களை அனுபவித்து அல்லற்படும் ஆன்மாக்கள் பிறவாத நிலையை அடைந்து ஆண்டவனோடு கலந்து ஆனந்தநிலையை அடைய

வேண்டும் என்பதே வேதங்களை முதன்மை நூலாக ஏற்றுள்ள வைதீக சமயங்களின் நோக்கமாகும்.

மின்னலை ஆயுதமாகக் கொண்டுள்ள இந்திரன்தான் வேதத்தின் முதன்மையான தெய்வம். அடுத்தபடியாக உள்ள தெய்வம் அக்கினி, மூன்றாவதாக உள்ள தெய்வம் வருணன். அதன்பின் வாயு, சூரியன், உஷா, உருத்திரன், விஷ்ணு, அசுவினி, தேவர்கள், பிரகஸ்பதி, பிராமணஸ்பதி, பிரஜாபதி, அதிதி போன்றவையாகும்.

தைத்தீரிய உபநிடதம் மனிதனின் பிறப்பைப் பற்றி இவ்வாறு கூறுகிறது, “எதிலிருந்து எல்லாப் பொருட்களும் உண்டானதோ, எதனால் உலகில் உள்ள பொருட்கள் அனைத்தும் காக்கப்படுகின்றனவோ அதுதான் பிரம்மம் என்றும் கடவுள் என்றும் விராட புருஷன் என்றும் தைத்தீரிய உபநிடதம் கூறுகின்றது.

இலிங்க வடிவமாக இருக்கும் ஆண்டவனுக்குச் செய்யப்படும் அபிஷேகங்கள் பற்றியும் வேதங்கள் கூறுகின்றன. விராட புருஷனான பிரம்மம்தான் மேலான தெய்வம். விராட புருஷனிடமிருந்துதான் இதர தெய்வங்களான இந்திரன், அக்கினி, சந்திரன், வாயு எனப்பட்ட தெய்வங்களெல்லாம் தோன்றின என்று புருஷ சூத்திரம் கூறுகிறது. இதைத் தவிர விராட புருஷனின் எந்தெந்த உறுப்புக்களிலிருந்து எந்தெந்தத் தெய்வங்கள் தோன்றினவென்றும் புருஷசூத்திரம் கூறுகிறது. விராட

புருஷனின் உள்ளத்தில் இருந்து சந்திரனும், அவனது கண்களிலிருந்து சூரியனும், வாயிலிருந்து இந்திரனும்-அக்கினியும், மூச்சிலிருந்து வாயுவும் தோன்றினா் என்று கூறுகிறது.

இருக்கு வேதம் பத்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இருக்கு வேதத்தின் முதலாவது மண்டலம் அக்கினியைப் பற்றிக் கூறுகிறது, ''அக்கினியே, மனிதனுக்கு உணவைக்கொடு, அவனது இன்பங்களுக்கேதுவான அறிவைக் கொடுத்து இறைவனோடு சோ்த்துவை. எம் தந்தையான நீ எமக்கு என்றும் உதவியாக இருந்து ஈடேற்று, இருட்டிலிருக்கும் மனிதருக்கு வெளிச்சத்தைக் காட்டு, பொய்மையில் உழலும் மனிதனுக்கு உண்மையைப் புரியவை, அழியும் நிலையுள்ள மனிதனுக்கு அழியா நிலையைக் கொடு'' இவ்வாறு அக்கினியைப் பற்றிப் பாடும் பாடல்கள்தான் முதலாவது மண்டலத்தில் உள்ளன.

இரண்டாவது மண்டலத்தில் இந்திரனை வழிபட்டு அவனால் அடையும் இன்பங்களைப் பற்றிய பாடல்கள் உள்ளன. இருக்கு வேதத்தில் உள்ள பாடல்களில் கால்வாசிப் பாடல்கள் இந்திரனைப் பற்றியவையே. இதிகாச புராணங்களில் வரும் இந்திரன் வேறு. வேதத்தில் வணங்கப்படும் இந்திரன் வேறு. வேதத்தில் உள்ள இந்திரன் எந்தக் குறைகளும் இல்லாதவன்.

தவறான செயல்கள் எதுவும் செய்யாதவன். மக்களுக்கு நன்மை செய்பவனாகவும், அவர்களையும் பசுக்களையும் காப்பவனாகவும், பசுக்களுக்கும் மக்களுக்கும் துன்பம் செய்வோரைத் தண்டிப்பவனாகவும் காணப்படுகிறான். மக்களும், தேவர்களும், முனிவர்களும், ரிஷிகளும் அவனிடமே தமது குறைகளை எடுத்துக் கூறினர். இவர்களுக்குத் துன்பமேற்படும் வேளைகளில் இந்திரன் அவற்றை நீக்கி அவர்களைக் காப்பாற்றி இன்பமளித்ததாக வேதப் பாடல்கள் கூறுகின்றன.

இருக்கு வேதத்தின் மூன்றாவது மண்டலம் வருணனைப் போற்றுகிறது. மழையை அளித்து உயிர்களைக் காக்கும் கடவுளாக வருணன் போற்றப்படுகிறான். உலக உயிர்களுக்கு உணவும் நீரும் கொடுப்பவன் வருணன். அதனால் சர்வ சக்தியுள்ளவனாகவும், மக்களின் நண்பனாகவும், நாட்டின் மன்னனாகவும் வருணன் சித்தரிக்கப்படுகிறான். மன்னன் எப்படிக் குடி மக்களைக் காக்கிறானோ, அது போல வருணன் உலக மக்களைக் காக்கிறான் என இருக்கு வேதத்தின் மூன்றாவது மண்டலம் கூறுகிறது.

நான்காவது மண்டலம் வாயுவைப் பற்றிக் கூறுகிறது. சிவன் வாயுவை ஒரு கூறாகக் கொண்டவன் என்று புராணங்கள் கூறுகின்றன. அத்துடன் இராமாயணத்தில் வரும் அனுமன் வாயுபுத்திரன்.

மகாபாரத நாயகர்களுள் ஒருவனான வீமனும் வாயுபுத்திரன். வாயு மனிதனுக்கு மிகவும் அத்தியாவசியமான பொருள். வாயு இல்லாவிட்டால் உயிர்கள் ஒரு கணமும் வாழமாட்டா. வாயுவைப் பிராணன் என்றும் சொல்வர். பிராணன் என்பது உயிர். வேதப்பாடல் வாயுவைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது,

**“வாயுவே உன்மீது யாரும் ஆதிக்கம் செலுத்தமுடியாது**
**உனக்கு மேற்பட்ட சக்திகள் எதுவும் இல்லை**
**உன்னைத் தடுக்க யாராலும் முடியாது**
**உன்னைவிடப் பலசாலியும் யாரும் இல்லை**
**யாராலும் வெல்ல முடியாதவன் நீ”**

அதனால் மக்களுக்குத் தீங்கு செய்யாது அவர்களது வாழ்வை மேம்படுத்துவாயாக’’ இவ்வாறு வாயுவைப் போற்றும் பாடல்கள் பல இருக்குவேதத்தில் உள்ளன.

இருக்குவேதத்தின் ஐந்தாம் மண்டலம் சூரியனது பெருமைகளைப் பற்றிக் கூறுகிறது. வேதத்தில் சூரியன் பல பெயர்களால் சுட்டப்படுகிறான். அக்கினியின் ஒரு வடிவமான சூரியனே மக்களின் நல்வாழ்விற்கு உதவுவனவாகப் போற்றப்படுகிறான். வேதகால மக்கள் இருளுக்குப் பயந்தனர். இருளில் கொடிய மிருகங்கள் தாக்கும். திருடர்கள் திருடுவார்கள், தீய காரியங்கள் அனைத்தும் இருளில் நடைபெறுவதால் விடியலைக் காணும் மக்கள் மிகவும் மகிழ்ந்து போற்றிச் சூரியனை

வரவேற்றனர். சூரிய தேவனைப் பற்றிப் போற்றிப் புகழும் பாடல்கள் பல இருக்கு வேதத்தில் உள்ளன, ‘‘சூரிய தேவனுக்கு உலகில் நடப்பவையாகவும் தெரியும். சகல சக்திகளும் உள்ளவன் அவன். அறிவாளிகளின் தலைவன் அவன். அவனால் தான் உலகம் இயங்குகிறது. அவனது உதவியால் உயிர்கள் வாழ்கின்றன. தானியங்களை உற்பத்தி செய்பவன் அவன். உயிர்களுக்கு உணவளிப்பவன் அவன். அவனது வருகையால் தான் உலகம் விழித்துச் செயற்படுகிறது. தர்ம தேவதையின் கண்ணாகச் சூரியன் இருப்பதால் உலகில் தீமை செய்தோரைக் கண்டுபிடித்துச் சூரியனே தண்டனை கொடுக்கிறான்.’’ இவ்வாறு இருக்கு வேதப்பாடல்கள் சூரியனைப் பாராட்டுகின்றன.

இருக்குவேதத்தின் ஆறாவது மண்டலம் சமூகத்தைப் பற்றிச் சொல்கிறது, ‘‘சமூகத்தை நேசி அதற்கு மதிப்புக்கொடு பசியால் வருந்துவோருக்கு உணவுகொடு துன்பப்படுவோரின் துன்பத்தை நீக்கு் உன்சக்தியைப் பெருக்கு ஆற்றலை வளர்த்துக்கொள் பலமாக உடலை வைத்திரு பகைவனிடத்துப் பணிந்துபோகாதே உயர்ந்த செயல்களை எப்போதும் செய் மக்களுக்கு வழிகாட்டு’’ என்று சமூகத்தைப் பற்றியும் சரியைத் தொண்டு பற்றியும் இருக்கு வேதத்தின் ஆறாவது மண்டலம் கூறுகிறது.

ஏழாவது மண்டலம் விஷ்ணுவைப் பற்றிக் கூறுவதாகச் சொல்லப்பட்ட போதும் அது அவரது பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. வேத காலத்திற்குப் பின்புதான் வி'ணுவைப் பற்றிய கருத்துக்கள் உருவாயின. வேதாந்தம் என்னும் புதிய தரிசனம் உருவாக்கப்பட்ட பின்புதான் விஷ்ணு பரம்பொருளாகக் கொள்ளப்படுகிறார்.

“விஷ்ணுவே, நீதான் உயர்ந்த தெய்வம். உனக்குத்தான் பூமியின் எல்லாப் பகுதிகளும் தெரியும். உனது விசுவரூபத்தில் உலகில் உள்ள பொருட்கள் யாவும் அடங்குகின்றன. உனது சிரம் சொர்க்கத்தையும் துளைத்துக்கொண்டு மேலே சென்றுவிட்டது. உனது பலம் பொருந்திய கால்கள் பூமியைத் துளைத்துச் சென்று பாதாளத்தையும் தாண்டிச் சென்றுவிட்டன. உன் நீண்ட கைகள் திக்குகள் அனைத்தையும் தாண்டிச் சென்றுவிட்டன. அதனால் உனது சிரசையும் கால்களையும், கைகளையும் யாராலும் காணமுடியாது அதனால் உனது பெருமைகளையும் அளவிட்டுச் சொல்ல முடியாது” என்று இருக்குவேதப் பாடல் ஒன்று கூறுகிறது.

எட்டாவது மண்டலம் வேதங்களின் உயர்வைப் பற்றியும் அதனைப் பின்பற்றுபவர்கள் அடையும் நன்மைகள் பற்றியும் கூறுகிறது, ‘வேதத்தை அலட்சியப்படுத்துபவன் மாறுபட்ட புத்தியை உடையவன்.

வேதம் தான் உயிர்களைப் பாதுகாத்துப் பிறவாத இன்பநிலையைத் தந்து இறைவனுடன் சேர்த்து வைக்கிறது. வேதச் சொற்கள் மனிதனுக்கு ஒளியைத் தந்து நேர்வழியைக் காட்டும். அது எல்லாத் திசைகளிலும் பரந்திருந்து மனிதனைத் தீயவற்றிலிருந்து காப்பாற்றுகிறது' என்று வேதத்தின் எட்டாவது மண்டலப் பாடல்கள் கூறுகின்றன.

இருக்குவேதத்தின் ஒன்பதாவது மண்டலம் விடியலைப் பற்றிக் கூறுகிறது. இம்மண்டலத்தில் உள்ள பாடல்கள் சூரியனை வரவேற்பனவாகவும், விடியலுக்குமுன் செய்யப்படும் செயல்களைப் பற்றியும் கூறுவனவாகவும் உள்ளன, 'இரவின் கொடுமை முடிந்து விட்டது. சூரியனை வரவேற்று மகிழ மிருகங்களும் பறவைகளும் இன்பகீதம் இசைக்கின்றன. சூரியனின் வருகை அவற்றிற்கு எவ்வளவு ஆனந்தம். புத்திக்கூர்மையுள்ள கதிர்கள் உலகெங்கும் பரவி அறிவையூட்டத் தயாராகின்றன. அழகான பல நிறங்களில், பல்வேறு வடிவங்களில் அறிவைக் கொடுப்பேன் என்ற குறிக்கோளுடன் எமக்கு உதவுபவளே வாழ்க' என்று இருக்கு வேதத்தின் ஒன்பதாவது மண்டலத்தில் உள்ள பாடல்கள் கூறுகின்றன,

**"ஒவ்வொரு நாளும் கிழக்கே தோன்றும்**
**விடியலே உன்னை வணங்கி வரவேற்கிறோம்**

**சொர்க்கம் பெற்றெடுத்த பொன்மகளே!**
**பளபளப்பான ஆடைகளால் மூடப்பெற்ற**
**கன்னிப் பெண்ணே!**
**உன்னைக் கண்களாற் காணும்போது உலகே**
**உன்னடிமையாகிறது**
**புனிதமான விடியலே, உயர்ந்த சூரியதேவனை**
**எமக்குத் தருபவளே வாழ்க"**

என்று இருக்குவேதத்தின் ஒன்பதாவது மண்டலத்தில் உள்ள பாடல்கள் கூறுகின்றன.

இருக்குவேதத்தின் பத்தாவது மண்டலம் சூதாட்டத்தினைப் பற்றிக் கூறுகிறது. அதன் தீமைகளைப் பற்றியும் கூறுகிறது. சூதாட்டத்தில் ஈடுபட்ட ஒருவன் தனது பொருட்களையெல்லாம் இழந்து புலம்புவதாகச் சில பாடல்கள் கூறுகின்றன. வேதகாலம் வேதகாலத்திற்கு முற்பட்ட காலத்தில் சைவசமயம் பற்றிய குறிப்புக்கள் இல்லை. இருப்பினும் சிவன், மகாவிஷ்ணு, பெண் தெய்வ வழிபாடுகள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. வேதகாலத்தின் பின் வேதத்தில் குறிப்பிட்ட தெய்வங்களின் மகிமை குறைந்து சிவன், மகாவிஷ்ணு, விநாயகர், சூரியன், முருகன், பெண் தெய்வங்களான மகாலட்சுமி, காளி, பராசக்தி போன்ற தெய்வ வழிபாடுகள் முனைப்புப் பெற்றன.

திராவிட மக்கள் வாழ்ந்த சிந்துவெளிச் சமவெளியில் நிலவிய கடவுள் வணக்கம் ஆரியர் வருகையின்பின் மாறுபட்ட போதும் அதன்பின் அவ்வணக்கம் ஆரம்பித்து இன்றுவரை நடைமுறையில் உள்ளதென்று கூறலாம். சிந்துவெளியில் இருந்த சிவவழிபாடு,பெண் தெய்வ வழிபாடு,மரங்களை வணங்கல், நாகத்தை வணங்கல், மாதா, பிதா குருவை வணங்கல், பூமியையும், ஆறுகளையும் வணங்கல், அக்னியை வணங்கல், அரசனை வணங்கல், சூரியனை வணங்கல், மும்மூர்த்திகளை வணங்கல் போன்றவை இன்றும் இருப்பதைக் காண்கிறோம்.

இன்றைய வழிபாட்டு முறைகளைச் சங்ககாலத்திலும் காணக்கூடியதாக இருக்கிறது. சங்ககால மக்கள் நிலத்தை ஐந்து வகையாக வகுத்து ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு கடவுளையும் அவர்களது கலாச்சாரத்தையும் வகுத்தனர்.

குறிஞ்சி நிலத்தெய்வமாக முருகன் வணங்கப்பட்டான். குறிஞ்சி நிலத்தில் வாழும் உயர்ந்தவர்களை பொருப்பன், வெற்பன், சிலம்பன் என்றும், தாழ்ந்தோரைக் குறவர், கானவர் என்றும் வகுத்தனர். குறிஞ்சி நிலப் பறவைகளாகக் கிளியும், மயிலும் இருந்தது. விலங்குகளாகப் புலி, கரடி, யானை, சிங்கம் போன்ற மிருகங்கள் இருந்தன. ஊரைச் சிறுகுடி என்றும், நீர்

நிலைகளை அருவி, சுனை என்றும் அழைத்தனர். குறிஞ்சி நிலத்திற்குரிய மலர்களாக வேங்கைப்பூ, காந்தள்ப்பூ, என்பன இருந்தன. குறிஞ்சி நிலத்தில் சந்தனம், தேக்கு, அகில், அனேகு, நாகம், மூங்கில் போன்ற மரங்கள் வளர்ந்தன. அவர்களது இசைக்கருவிகளாக தொண்டகப்பறையும், குறிஞ்சி யாழும் இருந்தன. அவர்கள் மலை நெல், மூங்கில் அரிசி, தினை என்பவற்றை உணவாக உண்டனர். மலை நெல் விதைத்தல், தினைகாத்தல், தேன் எடுத்தல், கிழங்கு வகைகளைத் தோண்டி எடுத்தல் என்பனவே குறிஞ்சி நில மக்களின் தொழில்களாகும். அருவியில் நீராடல், சுனையில் நீராடல், வேட்டையாடல் என்பன அவர்களது பொழுபோக்குகளாகும்.

பாலைநிலம் வளம் குறைந்தது. அதன் தெய்வமாகத் துர்க்கை போற்றப்பட்டாள். முல்லை நிலத் தெய்வமாக திருமால் வணங்கப்பட்டார். மருத நிலத் தெய்வமாக இந்திரன் வணங்கப்பட்டான். நெய்தல் நிலத் தெய்வமாக வருணன் வணங்கப்பட்டான். காலப்போக்கில் ஐந்து நிலமக்களும் கலியுகத் தெய்வமான முருகனின் பெருமையை உணர்ந்து முருகனை முழுமுதற் கடவுளாக ஏற்று வணங்க ஆரம்பித்தனர்.

குறிஞ்சி நிலம் காடும் மலையம் சார்ந்த வளமான நிலமாகும். அங்கு வாழ்ந்த மக்களுக்கு வேண்டிய

உணவு வகைகளைக் காடு அவர்களுக்கு இலவசமாக வழங்கி வந்தது. காட்டில் உள்ள மரங்களில் எப்பொழுதும் கனிகள் இருக்கும். நிலத்தில் கிழங்குகள் இருக்கும். மரங்களில் தேன் இருக்கும். காட்டில் உள்ள மிருகங்களை எவ்வேளையிலும் வேட்டையாடி உண்ணக் கூடியநிலை அங்கு வாழ்ந்த மக்களுக்கு இருந்தது. அதனால் அவர்கள் தொழில் செய்யாமலே உணவைப் பெற்று உண்டு மகிழ்ந்து வாழ்ந்தனர். அதனால் அவர்களுக்குப் பொழுதுபோகிற்கு அதிக நேரம் இருந்தது. குன்றுகள் தோறும் குமரன் இருப்பான் என்று தொல்காப்பியமும் சங்ககால நூல்களும் கூறுகின்றன. குறிஞ்சி நிலம் குன்றுகளால் ஆனதால் ஒவ்வொரு குன்றும் குமரக் கடவுளின் கோட்டமாகவே விளங்கியது. குறிஞ்சி நில மக்கள் தினை விதைப்பர். முற்றிய தினைக் கதிர்களைக் குருவிகள் தின்னாவண்ணம் காவல்காப்பர். தினை மாவும் தேனும் விட்டுக் குழைத்து அதை ஒரு விளக்காக்கி அதற்குள் பசுநெய் விட்டுக் கொழுத்திச் சுட்டு தமது குலதெய்வமான முருகனுக்குப் படைத்துவிட்டு உண்பதைக் குறிஞ்சிநில மக்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

குறிஞ்சி நிலத்தின் மருமகனான முருகனை அங்கு வாழும் மக்கள் தமது குடும்ப உறுப்பினனாகவே நினைத்து வணங்கினர். குறிஞ்சி நிலத்தில் தினைக்குக் காவல் காத்த வள்ளி மீது முருகன் காதல் வசப்பட்டுப்

பல திருவிளையாடல்கள் புரிந்து வள்ளியை மணந்தமையால் அந்நில மக்கள் முருகனைக் காவல்த் தெய்வமாகவும், காதல் தெய்வமாகவும் நினைத்தனர். குறிஞ்சி நிலப் புலவர்கள் காதலின் தன்மையை மிகவும் சுவையாகப் பாடியுள்ளனர். இச்சுவையான கவிதைகளை நற்றினை, குறுந்தொகை என்ற நூல்களில் காணலாம்.

இறையனார் என்ற புலவர் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த பெண்ணின் கூந்தலில் உண்டான நறுமணத்தை முகர்ந்து சொக்கிய தலைவனின் கூற்றாகப் பாடும் பாடல் குறுந்தொகை என்ற நூலில் முதலாவது கவிதையாக உள்ளது.

**“கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீ இயநட்பின், மயில் இயல்**
**செறிஎயிற்று அறிவை கூந்தலின்**
**நறியவும் உளவோ? நீ அறியும் பூவே”**

உனது கூந்தலின் அழகை என்னால் வர்ணிக்க முடியவில்லை. அதன் சுகந்த மணம் என்னுயிரை வதைக்கிறது, “ஏ வண்டே, நீ தான் பூமியிலுள்ள எல்லாப் பூக்களிலும் மொய்த்துத் தேனை உறுஞ்சுவாய். உண்மையைச் சொல், எனக்காகச் சொல்லாதே. மலர்களைத் தழுவி முகர்ந்து முத்தமிட்டு அவை

நோகாவண்ணம் தேனை நீ எடுப்பதால் கேட்கிறேன். மயில் போன்ற சாயலையும் முல்லைப் பூக்களைப் போன்ற பற்களையும் உடைய எனது காதலியின் கூந்தலிலுள்ள நறுமணத்தைவிடச் சிறந்த நறுமணமுடைய மலர்கள் எதுவும் உண்டா? பக்கம் சாராது நடுநிலை நின்று சொல்'' இவ்வாறு காதலர்களிடையே நடந்த ஒரு விடயம் பற்றி குறுந்தொகையிலுள்ள பாடல் சொல்கிறது. இப்பாடலால் பெரும் திருவிளையாடல் ஒன்று நிகழ்த்தப்பட்டது. எல்லோருக்கும் தெரியும். குறுந்தொகை என்ற நூலில் காதல் சிறப்பை வலியுறுத்தும் பாடல்கள் 147 உண்டு. அதிலுள்ள இன்னொரு பாடல் இது.

**“செங்களம் படக்கென்று அவுணர் தேய்த்த,**
**செங்கோல் அம்பின், செங்கோட்டு யானை,**
**கழல் தொடி சேய் குன்றம்**
**குருதிப் பூவின் குலை காய்ந்தட்டே”**

இளைஞன் ஒருவன் ஒரு செங்காந்தள்ப் பூவொன்றைக் கொண்டு வந்து அவன் விரும்பும் பெண்ணின் ஊர்க்காரனிடம் கொடுத்து அதைத்தான் காதலிக்கும் பெண்ணிற்குக் கொடுக்கும்படி கேட்கிறான். அதற்கு அந்த ஊர் இளைஞன் சொல்கிறான், “நீ எமது பகுதியில் உள்ள பெண்ணிற்குச் செங்காந்தல்ப் பூவைக்

கொடுக்கச் சொல்கிறாய். நாம் யார் தெரியுமா? முருகனின் இனத்தவர்கள். அவன் தான் எமது தெய்வம். அவன் வாழும் மலை இது. அவன் உலக மக்களைக் கொடுமைப்படுத்திய சூரனையும் அவனோடு சேர்ந்த அசுரர்களையும் கொண்று குவித்தவன். போர்க்களம் முழுவதும் இரத்த ஆறு ஓடியது. அவன்விட்ட அம்புகள் யாவும் இரத்தம் தோய்ந்தவை. யானை மீது அவன் சவாரி செய்பவன். உடலெங்கும் வடுக்களையுடையவன். அப்படிப்பட்ட வீரனான முருகன் வாழும் எமது குன்றில் நிறையச் செங்காந்தள்ப்பூக்கள் உண்டு. அதனால் நாம் அவற்றைப் பறித்துச் சூடக்கொடுப்போம். நீ கொண்டு வந்த பூவைக் கொண்டு செல்'' என்று எச்சரிக்கிறான்.

குறுந்தொகையிலுள்ள பல பாடல்கள் குறிஞ்சி நிலத்தின் செழிமையையும் அங்கு வாழ்ந்த மக்களின் செல்வச் செழிப்பையும் கூறுகின்றன. முருகனின் அருளால் குறிஞ்சி நிலமக்கள் செல்வந்தர்களாக வாழ்ந்தனர். அதனால் முருகனின் பெருமையை உணர்ந்த ஏனைய நான்கு நிலமக்களும் முருகனையே தமது தெய்வமாகக் கொண்டனர். அதன்பின் உலகில் வாழும் அனைவரும் முருகனின் பெருமையை உணர்ந்து முருகனே கலியுகத் தெய்வமென்று போற்றி வணங்குகின்றனர்.

சிந்துவெளியில் நடைபெற்ற **அகள்வாராய்**ச்சியின் போது பல சிவலிங்கங்கள் மீட்கப்பட்டன. அதனால் சிவவழிபாடு நடந்திருக்கிறது. அதன்பின் சிந்துவெளியில் குடியேறிய ஆரியர் உருவாக்கிய வேதங்களில் சிவன் சிறு தெய்வமாக உருவகிக்கப்பட்டான். அதன் பின்பு சங்க காலமக்கள் மீண்டும் தம் மூதாதையரான சிந்துவெளி மக்கள் வணங்கிய தெய்வங்களை வணங்கத் தொடங்கினர். சைவ சமயத்தின் மூலநூலான சிவஞானபோதம் சைவசமயத்தின் பெருமைகளையும் அதன் தன்மைகளையும் விரிவாகக் கூறுகிறது.

சைவாகமங்களிலுள்ள சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களுள் ஞானபாதத்தின் கண் சொல்லப்பட்ட கருத்துக்களைச் சிவஞான போதம் விரிவாகக் கூறுகிறது. இச்சிவஞானபோதம் சிவபெருமானின் திருக்கரத்திலுள்ளது. இந்நூலைச் சிவபெருமான் நந்தி தேவருக்கு உபதேசிக்க, நந்திதேவர் அதைத் தனது மாணவரான சனற்குமார முனிவருக்கு அறிவுறுத்த, சனற்குமார முனிவர் தனது மாணவரான மெய்கண்ட தேவருக்கு உபதேசிக்க, மெய்கண்டதேவர் தனது மாணவர்களும் சைவப்பெரு மக்களும் பயனுறவேண்டி அதை நூலாக எழுதினார் என்பது வரலாறு.

சிவஞானபோதத்தில் கடவுள் வாழ்த்தில், ‘‘சுயம்பு மூர்த்தியாகிய விநாயக் கடவுளினுடைய இரண்டு திருவடித் தாமரையையும் மெய்யன்பர்கள். தமது சிரசின் கண்ணே சூடுவர்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**“கல்லார் நிழன்மலை**

**வில்லார் அருளிய**

**பொல்லார் இணை மலர்**

**நல்லார் புனைவரே.”**

என்பது சிவஞானபோதத்தின் கடவுள் வாழ்த்து. இதிலிருந்து விநாயகர் வணக்கம் அந்நாளில் இருந்ததாகக் கூறப்படுகிறது. அத்துடன் சைவமுழு முதற் கடவுளான சிவனைத் தொழுமுன் விநாயகரைத் தொழ வேண்டும் என்றும் கூறப்படுகிறது. இது பற்றி முழுமையாக தெரிந்து கொள்ள நான் எழுதிய விநாயகர் புராணம், இன்பத்தை அள்ளித் தரும் இந்து மதம் என்ற பத்துப் பாகங்களைக் கொண்ட நூல்களை வாசிக்கவும்.

பகவத் கீதையின் காலம் முன்பு குறிப்பிடப்பட்டது. பகவத்கீதையைப் படிக்கமுன் விநாயகரைத் தொழவேண்டும், ஸ்ரீகீதா மாஹாத்மியத்தில் முதலாவதாக, ‘‘ஸ்ரீகணேசாயநம’’ என்று கூறிய பின்பே ஸ்ரீராதா ரமணாயநம’’ என்று சொல்லப்படுகிறது. எனவே

பகவத்கீதை தோன்றிய காலத்தில் விநாயக வணக்கம் இருந்துள்ளது.

பகவத்கீதையில் விபூதியோகம் என்றொரு அத்தியாயம் உண்டு. அதில் மஹாவிஷ்ணு தான் எடுத்துள்ள அவதாரங்களைப் பற்றிக் கூறுகிறார். விபூதியோகத்திலுள்ள இருபத்திநான்காவது சுலோகத்தில் மகாவிஷ்ணு, "ஸேனானீன மஹம் ஸ்கந்தக" என்று கூறுகிறார். இதன் அர்த்தம் சேனாதிபதிகளில் நான் முருகக் கடவுள் என்பதாகும். அப்படிப் பார்த்தால் வேதவியாசரே வேதங்களைத் தொகுத்தவர். வேதத்தின் இறுதிப் பாகம் உபநிடதங்கள். கீதை ஓர் உபநிடதம். அவ்வாறு பார்க்கும் போது வேதத்தில் குறிப்பிடப்படாத முருகக் கடவுள் உபநிடதமான பகவத் கீதையில் குறிப்பிடப்படுகிறார். அதை வைத்துக் கொண்டு வேதகாலத்திலும் முருக வழிபாடு இருந்திருக்கிறது என்று துணிந்து கூறலாம். இருக்குவேதத்தில் ஏழாவது மண்டலத்தில் மகாவிஷ்ணுவைப் பற்றியப் பாடல்கள் உள்ளன. அப்பாடல்களில் மகாவிஷ்ணு எடுத்த விஷ்வரூபத் தோற்றத்தைப் பற்றியும், அதன் இயல்புகளைப் பற்றியும் கூறப்படுகிறது. அதில் குறிப்பிட்டவற்றையே பகவத்கீதையும் குறிப்பிடுகிறது. இதன் மூலம் மகாவிஷ்ணுவின் வடிவில் முருகன் வேதகாலத்தில் தொழப்பட்டான் என்ற உண்மை புலனாகிறது. தமிழ் நூல்கள் பலவும் தமிழின்

தந்தையென்றும், முருகனைத் தமிழ்த் தெய்வமென்றும் கூறுகின்றன. இவற்றை நக்கீரரது பாடல்களும் ஔவையாரின் பாடல்களும் உறுதிசெய்கின்றன. வேதங்களும், பழந்தமிழ் நூல்களும், உபநிடதங்களும் இந்தியா முழுவதும் முருகவழிபாடு இருந்ததை ஏதோ ஒரு வழியில் ஒப்புக்கொள்கின்றன.

**3**

சைவசித்தாந்தப் பெருநூலான சிவஞானபோதம் கடவுளின் நிலை பற்றிப் பின்வருமாறு கூறுகிறது, “பிரமாவிற்கு மேல் விஷ்ணு, அவருக்கு மேல் உருத்திரன், அவருக்கு மேல் மகேஸ்வரர், அவருக்கு மேல் சதாசிவன், அவருக்கு மேல் விந்து, அதற்கு மேல் நாதம், அதற்கு மேல் சக்தி, அதற்கு மேல் சிவம். சிவனே சிருஷ்டி, திதி, சங்காரம் என்னும் அனைத்திற்கும் காரணர். சிவனே தேவ நாயகர், ஞானமூர்த்தி. அத்துடன் சிவதத்துவர், தாண்டேஷ்வரர். அவரை சுகாசணத்தில் இருத்தி புஷ்பத்தைக் கையிலே கொண்டு வணங்க வேண்டும் என்று மகுடாகமம் சொல்கிறது.

சங்கரருக்கு முன்பு சைவம் என்றொரு சமயமே இருந்தது. சங்கரர் தான் சைவக் கடவுள்களைப் பிரித்து வெவ்வேறாக்கி, வெவ்வேறு சமயமாக்கினார். ஒரே குடும்பத்தைக் காரணமின்றிப் பிரித்தது பெரும் தவறாகும். தாய் ஒரு சமயம், தந்தை ஒரு சமயம், பிள்ளைகள்

வெவ்வேறு சமயங்கள். இரத்த உறவினர்களை வெவ்வேறு சமயம் என்று பிரித்தமை பிழையென்று நான் கருதுகிறேன். ஒரு குடும்பத்தில் ஆறு சமயத்தவர்கள் எப்படி வருவார்கள்? சைவசித்தாந்தமோ அல்லது சைவநூல்களோ அல்லது சைவப்பெரியவர்களோ செய்யாத ஒரு செயலைச் சங்கரர் செய்துள்ளார். வேதரீதியாக, ஆகமரீதியாக, உபநிடதரீதியாகப் பார்த்தால் கடவுள் ஒருவர். அவர் சிவன். சிவனின் குடும்பத்தவர்கள் ஏனையோர். கணவனையும் மனைவியையும் பிரிக்க முடியாதென்பதற்காகவே சிவன் அர்த்தநாரீஸ்வரர் உருவம் எடுத்தார். அத்துடன் திருமந்திரம் சிவனும் சக்தியும் பிரிக்க முடியாத பிணைப்பு என்று சொல்கிறது. புராணங்களின் கூற்றுப்படி சிவன் தொழில்களைப் பங்கீடு செய்து கொடுத்துள்ளார். அதுவும் தனது இன்னொரு அவதாரத்திற்கு. சைவசித்தாந்த நூல்களான திருமந்திரம், சிவஞானபோதம் என்பன சிவனே மறைந்திருந்து ஐந்தொழில்களையும் செய்கிறார் என்று கூறுகிறது. சங்கரர் சைவசமயத்தை ஆறாகப்பிரித்தபோதும் மக்கள் அதைக்கவனத்தில் கொள்ளாது ஆறுதெய்வங்களையும் முன்பு போலவே வணங்கி வருகின்றனர். கந்த புராணம் சிவனே முருகனாக அவதரித்தவர் என்று கூறுகிறது. அதற்கான பாடலைக் கந்தபுராணத்தில் காணலாம்.

**“அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாயொன்றாய்**

**பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்**

**கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே**

**ஒருதிரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய"**

சைவசித்தாந்தம் சிவனுக்குக் கூறிய இலக்கணங்கள் முதல்வரியில் கூறப்பட்டுள்ளது. அந்த இலக்கணங்களையுடைய சிவன், சிவராத்திரி அன்று பிரம்மாவிற்கும், விஷ்ணுவிற்கும் இடையே யார் பெரியவர் என்ற போட்டியில் சண்டை ஏற்பட்ட போது பேரொளியாகத் தோன்றிய வரலாறு சைவர்களுக்குத் தெரியும். அந்தப் பிரமமாக நின்ற சோதிதான் முருகனாக அவதாரம் எடுத்தது என்கிறார் கச்சியப்பர்.

அசுரர்களின் கொடுமையை தாங்க முடியாத தேவர்கள் சிவனிடம் சென்று முறையிட, சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய சோதிதான் முருகனென்று புராணங்கள் கூறுகின்றன. அத்துடன் அச்சோதி சிவனென்றும், சிவனே சோதி வடிவாகி முருகனாக அவதாரம் எடுத்தாரென்றும் புராணங்கள் கூறுகின்றன.

முருகனுக்கு ஆறு திருமுகங்கள். இந்த ஆறு திருமுகங்களைப் பற்றிப் பண்டைய நூல்கள் பலவாறு கூறுகின்ற போதும் அவ் ஆறு திருமுகங்களும் அடியவர்களுக்கு அருளவென்றே சிவன் எடுத்ததாகக் கூறப்படுகிறது. தமிழரின் வாழ்க்கையை எடுத்து

நோக்கினால், அதில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு கடவுள் வணங்கப்பட்ட வரலாற்றைக் காணலாம். அவற்றை மாறுபாடு என்று கொள்ளாது அவதாரம் என்றும், திருவிளையாடல்கள் என்றுமே வரலாறு கூறுகிறது.

கந்தபுராணத்தை எடுத்து நோக்கினால், அதில் முருகனின் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. முருகனின் தோற்றம் பற்றியும், அத்தோற்றத்திற்கான காரணம் பற்றியும் கந்தபுராணம் விரிவாகக் கூறுகிறது. கந்தபுராணத்தின் முதற் பாடலான, ‘‘திகட சக்கரச் செம்முள மைந்துளான்’’ என்ற அடி சிவனின் சதாசிவ வடிவத்தைக் குறிப்பிடுகிறது. அத்துடன் கந்தபுராணம் மகாசதாசிவ வடிவத்தைப் பற்றியும் விரிவாகச் சொல்கிறது. சோமஸ்கந்த வடிவம் அடியவர்களின் அல்லல்களைத் தீர்ப்பது. புராணங்கள் இச்சோமஸ்கந்த வடிவத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றன. சிவன், சக்தி, விநாயகர், முருகன் எனச் சிவனின் குடும்பம் அவ்வடிவத்தில் உள்ளமையால் அவ்வடிவத்தை வணங்குவோருக்கும் சிவனினதும் விநாயகரினதும் முருகனினதும் அருள் மிகவும் இலகுவாகக் கிட்டும். அப்படிப்பட்ட வடிவத்தின் சிறப்பைப் பற்றிக் கந்தபுராணம் விரிவாகக் கூறுகிறது.

சிவனின் இலிங்கோற்பவ வடிவத்தைப் பற்றியும், அதன் புருவ அழகைப் பற்றியும் கந்தபுராணம் மிகவும் விரிவாகக் கூறுகிறது. பிரம்மாவும், விஷ்ணுவும் தம்முள் யார் பெரியவர் என்று தர்க்கப்பட்டு. அது முற்றி யுத்தமாக மாறிய போது சிவன் ஒளிப் பிளம்பாகத் தோன்றிய வடிவம் தான் இலிங்கோற்பவ வடிவம். அந்த வடிவம்தான் முருகன் என்று கந்தபுராணத்தின், ‘‘பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாகக் கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திரு முருகன் வந்தான்’’ என்ற பாடல் வரிகள் கூறுகின்றன.

வேதங்களையும் உபநிடதங்களையும் சிவன் குருவாக இருந்து சனற்குமார முனிவருக்கு உபதேசித்ததாக புராணங்கள் கூறுகின்றன. ஆனால் சிவஞானபோதம் என்ற நூல், சிவஞானபோதத்தைச் சிவன் நந்திதேவருக்கு உபதேசிக்க, நந்திதேவர் தனது மாணவனான சனற்குமார முனிவருக்கு உபதேசிக்க, சனற்குமார முனிவர் தனது மாணவரான மெய்கண்டதேவருக்கு உபதேசித்து, அதை உலக மக்கள் உய்ய நூலாக்கும்படி வேண்டினார் என்று கூறுகிறது. பிறப்பில்லாத சிவனை நந்தி என்று அழைப்பர். அந்த நந்தி தான் திருமூலருக்குத் திருமந்திரத்தை உபதேசித்ததாகத் திருமந்திரம் கூறுகிறது. தட்சணாமூர்த்தி வடிவத்தைப் புராணங்கள் குரு வடிவம்

என்று கூறுகின்றன. சிவன் குருவாக எடுத்த வடிவம் தட்சிணாமூர்த்தி வடிவம். அது போல, குரு சுவாமி என்ற வடிவத்தை முருகன் எடுத்துப் பிரணவ மந்திரத்தின் பொருளை, குரு வடிவெடுத்த தட்சணாமூர்த்தியாகிய சிவனுக்கு உபதேசித்தார். குருவிற்கு குருவானவன் சிவகுருவான முருகன் என்று கந்தபுராணம் கூறுகிறது.

**4**

சிவனுக்கு ஐந்து முகங்கள் உண்டு. ஆனால் கந்தபுராணத்தில் முருகனாக அவதரித்த சிவனுக்குக் கச்சியப்பர் ஆறுமுகச் சிவன் என்கிறார். ஐந்து முகங்களையுடைய சிவன் கந்தபுராணத்தில் ஆறுமுகங்களுடன் முருகனாகத் தோன்றுகிறார் என்று கச்சியப்பச்சிவாச்சாரியார் கூறுகிறார்.

கந்தனுக்கு ஆறுமுகங்கள் உண்டென்றும், அவ்வாறு முகங்களுக்கும் தனித்தனியான குணங்கள் உண்டென்றும் அருணகிரிநாதர் கூறுகிறார்.

**“ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே**
**ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே**
**கூறுமடி யார்கள் வினை தீர்த்தமுக மொன்றே**
**குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே**

**மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே**
**ஆறுமுக மானபொருள் நீயருள் வேண்டும்**
**ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.”**

கச்சியப்பரும் அருணகிரிநாதரும் முருக பக்தர்கள். கச்சியப்பர் கந்தபுராணத்தில் சொல்லிய முருகனது பெருமைகளை அருணகிரிநாதர் திருப்புகழில் சொல்கிறார். இருவரது சொற்களிலும் பெரிதாக மாறுபாடுகள் இல்லை.

கந்தபுராணம் கூறும் போரே அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் நடந்த இறுதியான கொடுமை மிக்கப் போர். அதன்பின் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் போர் நடைபெறவில்லை. மக்களையும் தேவர்களையும் வருத்திய அசுரரது குடியை பூண்டோடு அழித்தவன் முருகன். அதன்பின் அசுரர்களால் மீண்டெழ முடியவில்லை என்று கூறும் கச்சியப்பர் சிவனின் ஐம்பத்திநான்கு சிவவடிவங்களையும் முருகவடிவாக்கிக் கந்தபுராணத்தில் கூறுகிறார்.

முருகனின் ஆறு திருமுகங்களைப் பற்றி நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் மிகவும் விரிவாக கூறுகிறார்.

**“மாயிருண் ஞாலம் மறு இன்றி விளங்கப்**
**பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒரு முகம்**
**ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்**
**காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே- ஒருமுகம்**

**மந்திர விதியின் மரபுளி வழாஅ**

**அந்தணர் வேள்விஓர்க் கும்மே ஒருமுகம்**

**எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்**

**திங்கள் போலத் திசைவிளங்குமே ஒருமுகம்**

**செறு நர்த் தேய்த்து செல் சமம் முருக்கிக்**

**கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே ஒருமுகம்**

**குறவர்மட மகள் கொடிபோல் நுசுப்பின்**

**மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே ஆங்கம்**

**மூவிரு முகனும் முறை நவின்று ஒழுகலின்**

**ஆரம் தாழ்த்த அம்பிகட்டு மார்பிற்**

**செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு"**

உலகில் மிகுந்துள்ள துன்ப இருளைப் போக்குவது ஆறுதிருமுகங்களிலும் இருந்து வீசும் தெய்வீக ஒளியே. அத்தகைய ஒளியையுடைய முருகனின் திருமுகங்களில் ஒன்று, நூல்களாலும் ஆசிரியர்களாலும் விளக்க முடியாதவற்றை விளக்குவது. புலவர்கள் தமக்கு விளங்காதவற்றை முருகனிடம் முறையிட்டுப் பொருளை விளங்கிய வரலாற்றைப் புராணங்கள் கூறுகின்றன. அந்த முகம் சந்திரனது ஒளியைப் போலப் பிரகாசமாகவும், குளிர்மை நிறைந்ததாகவும், அறிவைத் தரக்கூடியதாகவும் இருக்கும். இந்த முகம் தான் தட்சணாமூர்த்திக்குரிய குருவடிவ முகம். தைப்பூசத் திருநாள் முருகனுக்குரியது. அத்தினத்தில் ஏடு தொடக்குவது வழக்கம். குருவாக

வந்து சிவனுக்கு உபதேசித்த முருகனைக் குருவாகக் கொண்டு முருக தலங்களில் அன்று சைவ மக்கள் ஏடு தொடக்குவார்கள்.

அடியவர்கள் மனமுருகி வேண்டுதல் செய்யும் போது மனம் குளிர்ந்து அடியார்களுக்கு வேண்டிய வரங்களை அளிப்பது ஒரு முகம்.

விதிமுறை வழுவாது அந்தணர்கள் செய்யும் யாகங்களைக் காப்பது ஒரு முகம்.

கொடும் போர் செய்வோரை அழித்து, கொடிய போர்கள் வராது காத்து, நீதியை நிலைநாட்டுவது ஒரு முகம்.

குறமடமகளான வள்ளியோடு சேர்ந்து அடியவர்களுக்கு வேண்டிய குடும்ப இன்பங்களை அள்ளித் தருவது ஒரு முகம்.

உலகிலுள்ள அனைத்தையும் ஒருருவில் வழங்குவதற்காகச் சிவன் எடுத்த அவதாரமே முருக அவதாரம். அவ் அவதாரம் அனைத்துத் துன்பங்களையும் போக்கும் என்பதால் மக்கள் முருகனைக் கலியுகவரதன் என்கின்றது.

சிவன் தனது பக்தனான மாக்கண்டேயரைக் காப்பாற்றுவதற்காக யமனைத் தனது காலால்

உதைத்தார். சிவன் யமனைக் காலால் உதைத்த வடிவம் காலாந்தகர் வடிவம். இவ்வடிவம் பற்றியும் அதன் தன்மை பற்றியும் கந்தபுராணம் விரிவாகக் கூறுகிறது. அத்துடன் இவ்வடிவத்திற்குரியவர் முருகனாக உருவெடுத்த சிவனென்றும் கூறுகிறது.

இது தவிர வீரபத்திர உருத்திரன் என்றொரு வடிவம் பற்றியும் கந்தபுராணம் கூறுகிறது. தக்கனது யாகத்தை அழிக்கச் சிவபெருமானது நெற்றிக் கண்ணிலிருந்து முருகனைப் போலத் தோன்றியவர் வீரபத்திரர். இதைப் புராணங்கள் சரவேஸ்வரர் வடிவம் என்று குறிப்பிடக் கச்சியப்பர் அதை முருகன் மீது ஏற்றி வீரபத்திர உருத்திர வடிவம் என்கிறார்.

புராணங்கள் விதந்து கூறும் வடிவம் பிட்சாடன வடிவம். இவ்வடிவத்தைப் பற்றிய பல்வேறு குறிப்புக்கள் கந்தபுராணத்தில் உள்ளன. சிவன் தான் முருகன் என்பதைச் சொன்ன கச்சியப்பர் சிவனின் ஒவ்வொரு வடிவத்தைப் பற்றியும் கூறி அதற்குப் பெருமை சேர்ப்பதாக நினைத்து முருகனோடு அதை இணைத்துக் கூறுவது ஒரு புதிய இலக்கிய வடிவமாகும்.

சலந்தாரி வடிவம் என்பது சிவன் முதியவடிவத்தில் கமண்டலம் ஏந்தி முனிவராகச் சென்று சலந்திரன் என்பவனை அழித்தார். இவ்வடிவத்தை எடுத்தே முருகன்

வள்ளியை மணம் புரிந்தார். அதனால் இவ்வடிவம் கந்தபுராணத்தில் மிகவும் சிறப்பாகக் கூறப்படுகிறது.

சங்கரநாராயண வடிவம் என்பது சிவன் வலது பாகம் சிவனாகவும் இடது பாகம் நாராயணனாகவும் எடுத்த வடிவம். பகவத் கீதையில் மகாவிஷ்ணு தான் முருகன் எனக் கூறுகிறார். அதைவிட அரியும் அரனும் ஒன்றென்று புராணங்கள் கூறுகின்றன. அரியான நாராயணன் முருகன் எனப் பகவத் கீதையில் சொல்லப்படுவதால் சங்கர நாராயண உருவம் முருகனெனக் நாராயணனின் உருவமாகிறது எனக் கச்சியப்பர் குறிப்பிடுகிறார்.

இவற்றைவிட ஏனைய சிவவடிவங்களைப் பற்றியும், அதன் சிறப்புக்கள் பற்றியும் கச்சியப்பர் கந்தபுராணத்தில் தேவையேற்படும் போதெல்லாம் சொல்கிறார். சிவமைந்தனான கந்தனின் புகழைப்பாட முனைந்த கச்சியப்பர் பல இடங்களில் முருகனின் தந்தையான சிவனைப் பற்றியும், அவரது அருட்செயல்களைப் பற்றியும், சிவனது வடிவங்களின் தோற்றம், பயன்பாடு, பெருமைகள் பற்றியும் மிகவும் விரிவாகக் கூறுகிறார். இது ஏன் என்ற கேள்வி கந்தபுராணத்தைப் படிப்போரின் மனதில் எழும். சிவன் தான் கந்தன் என்று முதலில் கூறிய கச்சியப்பர் சிவனின் அருட்செயல்களும் வடிவங்களும் முருகனுக்குப் பொருந்தும் என்று

கூறுவதோடு அவை பொருந்தும் இடங்களையும், அதற்கான வடிவங்களையும், கதைகளையும் கூறுகிறார். கந்தனின் புகழைப் பாடவேண்டிய கந்தபுராணம் சிவனின் புகழையும், பெருமைகளையும், அவதார மகிமைகளையும் மிகவும் சிறப்பித்துக் கூறுகிறது.

சிவன்தான் முருகன் என அறிந்தோம். சிவவடிவங்கள் ஐம்பத்திநான்கும் கந்தபுராணத்தில் சிறப்பித்துக் கூறப்படுகின்றன என்றும் அறிந்தோம். அருணகிரிநாதர் முருகனின் ஆறுதிருமுகங்களின் தன்மை பற்றியும், நக்கீரர் முருகனின் ஆறுதிருமுகங்களின் தன்மை பற்றியும் கூறியதை அறிந்தோம். இனிஅவ் ஆறுதிருமுகங்களைப் பற்றியும் அருணகிரிநாதரும், நக்கீரரும் கூறுவதைப் பார்ப்போம்.

ஆறுதிருமுகங்களில் முருகனது முகம் ஒன்று. மிகுதியாகவுள்ள ஐந்து முகங்களும் ஐந்து தெய்வங்களுக்குரியன. இதை வெளிப்படையாக யாரும் சொல்லாவிட்டாலும் புராணங்கள் கூறும் கதைகளில் இருந்து அந்த ஐந்து முகங்களும் சைவசமயத்திலுள்ள மற்றைய ஐந்து தெய்வங்களுக்குரியன என்பது புலனாகும்.

சிவனை முக்கண்ணன் என்றழைப்பர். சிவன் அர்த்தநாரீஸ்வரர். சிவனைவிட்டுச் சக்தியைப் பிரிக்க முடியாதென்று திருமந்திரம் கூறுகிறது. சிவனின்றிச்

சக்தியில்லை. சக்தியைப் பிரிந்து சிவமில்லை. சிவனின் இடக்கண்ணும், நெற்றிக் கண்ணின் அரைவாசியும் உமைக்குரியது. இதைச் சைவசித்தாந்த நூல்கள் அனைத்தும் கூறுகின்றன. முருகன் சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியமையால் சிவனும் சக்தியும் சேர்ந்தே முருகனைத் தோற்றிவித்தனர். இதனால் சிவசக்தியின் கூட்டாகவே முருகன் இருக்கிறான். சிவனின் சக்தியைத் திருமந்திரம் திருவருளம்மை என்று கூறுகிறது. சிவனது சக்தி திருவருளம்மை என்ற உமாதேவியார். சிவனினதும் உமாதேவியாரினதும் சக்தி முருகன். பழத்தையும் தேனையும் தனித்தனியாக உண்பதைவிடப் பழத்தையும் தேனையும் கலந்துண்டால் சுவை அதிகம். தேனில் தோய்த்துப் பலாப்பழத்தை உண்டால் அது மிக்க சுவையானது என்று இலக்கியங்கள் கூறுகின்றன. ஞானப்பழமான சிவனையும் ஞானத்தேனான உமாதேவியையும் கலந்து வந்தவன் முருகன். எனவே சிவசக்தியான முருகனின் அருள் சிவனைவிட மும்மடங்கு அதிகமானது. அதில் சிவனின் அருள் இருக்கும், சக்தியின் அருள் இருக்கும், இருவரும் சேர்ந்த அருள் இருக்கும்.

கந்தபுராணத்தில் போர் நடக்கும் போது முருகனுக்குத் தோல்வி ஏற்படுகிறது. அதனால் முருகன் தன் தந்தையான சிவனிடம் செல்கிறான். அவர் தனது சக்தியையும் உமாதேவியாரின் சக்தியையும் திரட்டி வேல்

என்ற படைக்களமாக ஆக்கிக் கொடுக்கிறார். சிவனினதும் உமாதேவியாரினதும் சக்தி திருவருள். இருவரும் அடியவர்களுக்குத் திருவருளைத் தான் கொடுப்பார்கள் என்று மெய்கண்ட சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. திருவருள் ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்பக் குருவாக வந்து செயற்பட்டு ஆன்மாக்களைப் பற்றிப் பிடித்துத் துன்புறுத்தும் ஆணவத்தை அழிக்கும் என்றும் மெய்கண்ட சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. சூரபத்மனைப் பிடித்தாட்டியது ஆணவம். அந்த ஆணவத்தைப் பற்றிக் கச்சியப்பர் பல பாடல்களில் கூறியுள்ளார். அனாதியில் படைக்கப்பட்ட உயிர்கள் எதுவும் அழிக்கப்படுவதில்லை என்கிறது சைவசித்தாந்தம். படைக்கப்பட்ட உயிர்கள் கர்மவினைக்கேற்பப் பிறப்பெடுக்கும், கர்மவினையை முடித்த உயிர்கள் இறைவனின் அடியைச் சேரும். புராணங்களை எடுத்து நோக்கினால் அரக்கர்கள் பலரின் உடல்கள் அழிக்கப்பட்டனவே தவிர உயிர்கள் அழிக்கப்படவில்லை. இந்த நிலையில் சூரபத்மனின் உடல் அழிக்கப்படுகிறது. அவனது ஆன்மா சேவலும் மயிலுமாகி முருகனின் கொடியாகவும், வாகனமாகவும் மாறுகின்றன. உடல் அழிக்கப்பட்டதும் ஆன்மா மலநீக்கம் பெற்று இறைவனையடைய உதவுவது திருவருள். மலநீக்கம் பெறாத ஆன்மாக்கள் திரும்பவும் பிறப்பெடுக்கின்றன. சிவனால் திருவருளைத் தவிர வேறெதுவும் கொடுக்க முடியாது. அதனால் சிவனும் உமையும் திருவருளை வேலாக்கி முருகனுக்கு

அளித்தனர். இந்த வகையில் பார்த்தால் முருகனது ஒரு முகம் சிவனது முகமாகவும், இன்னொரு முகம் சக்தியினுடைய முகமாகவும் இருப்பதைக் காணலாம்.

விநாயக புராணம் மயில் முருகனது வாகனமான வரலாற்றைக் கூறுகிறது. காசிப முனிவரின் மனைவியான விரதை தனது பிள்ளைகளை நாகர்கள் சிறைப்பிடித்துச் சென்றதால் மிக்க கவலையடைந்து விநாயகரைத் தொழுது விரதம் இருந்தாள். அவளது விரதத்தின் மகிமையால் விநாயகர் அவளின் முன் தோன்றினார். அவரைக் கண்டு மகிழ்ந்த விரதை தனது புத்திரரை நாகரிடமிருந்து மீட்டுத் தரும்படி கேட்டாள். அதற்கு விநாயகர், ''முனி பத்தினியே, சில காலம் செல்ல உனது வயிற்றிலிருந்து ஒரு முட்டை பிரவசமாகும். அதை என்னிடம் கொண்டுவா'' என்றார்.

சில காலங்களின் பின் விரதை ஒரு முட்டையை ஈன்றெடுத்தாள். அதை அவள் விநாயகரிடம் கொண்டு சென்றாள். விநாயகர் அவ் முட்டையைத் தனது நகத்தால் கீறி உடைத்தார். அதில் இருந்து ஒரு மயில் வெளிப்பட்டது. விநாயகர், அந்த மயிலில் ஏறிச் சென்று நாகர்களை வென்று விரதையின் புத்திரர்களைச் சிறை மீட்டார்.

சூரனுடன் போராடி வெற்றி பெற முடியாத முருகன் சிவனிடம் சென்று வேலைப் பெற்ற போது

சிவன் சொன்னார், ‘‘நீ முன்பு வள்ளியைத் திருமணம் சென்ற போது விநாயகரைத் தொழாமல் சென்றமையால் பல இன்னல்களுக்கு ஆட்பட்டாய். அதன் பின் தவறையுணர்ந்து விநாயகரைத் தொழுதமையால் அவரின் உதவியுடன் வள்ளியைத் திருமணம் செய்தாய். அது போல சூரனுடன் போர் புரியச் செல்லும் முன் விநாயகரை வணங்கி அவரது அருளைப் பெறு’’ என்றார். அதன்படி முருகன் விநாயகரிடம் சென்று போரைப் பற்றிக் கூறித் தன்னை ஆசிர்வதிக்குமாறு கூறினார்.

விநாயகர் மனம் மகிழ்ந்து தனது மயில் வாகனத்தை முருகனுக்குக் கொடுத்துவிட்டு, ‘‘தம்பி, எனது சக்தி முழுவதையும் இந்த மயில் வாகனத்தில் புகுத்தி உனக்கு நான் தருகிறேன். இந்த மயில் உனக்கு வேண்டியவற்றையெல்லாம் தரும்’’ என்றார். இதன் மூலம் முருகன் விநாயகரது சக்தியையும் பெருகிறான். அதனால் அவனது ஆறு திருமுகங்களில் ஒன்றாக விநாயகரது திருமுகம் உள்ளது எனக் கருதலாம். புராணங்கள் வேலை வணங்குவோர் மூன்று தெய்வங்களினதும் அருளைப் பெறுகின்றனர் என்று கூறுகின்றன.

முருகனது இன்னொரு முகம் மகாவிஷ்ணுவினுடையது. அது பற்றி முன்பு விபரமாகக் கூறப்பட்டது. எஞ்சியுள்ள ஒரு முகம் சூரியனது. முருகனது முகம் ஆயிரம் சூரியர்களின் பிரகாசத்தை

ஒத்தது என்று புராணங்கள் கூறுகின்றன. சூரியப் பிரகாசமான அந்த முகம் சூரியனது ஒளியைவிடப் பன்மடங்கு பிரகாசமானதென்றும், சூரியனின் கதிர்களைப் போல உலகெங்கும் பரவித் தீமைகளை அழிக்கும் என்றும், அருளும் என்றும் கந்தபுராணம் கூறுகின்றது. அதனால் முருகனை வணங்குவோர் ஆறு தெய்வங்களையும் வணங்குவதாகக் கருதப்படுவர். இதனால் தான் முருகன் கலியுகவரதன் என வர்ணிக்கப்படுகிறான்.

**"வான்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள்**
**விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது**
**ஒருகை; உக்கம் சேர்த்தியது ஒருகை;**
**நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை**
**அசை இயதுஒருகை;**
**அங்குசங் கடாவ ஒருகை; இருகை**
**ஐயிரு வட்டமொடு எ.்.குவலந் திரிப்ப! ஒருகை**
**மார்பொடு விளங்க; ஒருகை**
**தாரொடு பொலிய; ஒருகை**
**கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப; ஒருகை**
**பாடுஇன் படுமணி இரட்ட; ஒருகை**
**நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய; ஒருகை**
**வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட; ஆங்கப்**
**பன்னிருகையும் பாற்பட இயற்றி,**
**அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்**
**வயிர் எழுந்து இசைப்ப, வால்வளைஞால,**
**உரம்தலைக் கொண்ட, உரும்இடி முரசமொடு**

**பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ,**
**விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி;**
**உலகம் புகழ்ந்த ஓங்குஉயர் விழுச்சீர்**
**அலைவாய்ச் சேறலும் நிலை இயபண்பே அதா அன்று".**

தினமும் வானவீதியால் பல ரிஷிகள் செல்வார்கள் முனிவர்கள் செல்வார்கள் ˙ தேவர்கள் செல்வார்கள். இவர்களுக்குத் துட்ட அரக்கர்களால் தீங்குகள் பல ஏற்படும். அத்தகைய தீங்குகள் ஏற்படாமல் காப்பது முருகனின் மேலே எழுந்த ஒருகரம்.

அழகு பொலியும் செந்நிறமான ஆடைகளை அணிந்த முருகனின் தொடையில் இருப்பது ஒருகரம். அக்கரம் அடியவர்களுக்கு ஆதரவளிப்பது உறுதி கொள்ள வைப்பது. இன்னொருகரம் அங்குசத்தை வைத்திருப்பது. அங்குசத்தால் அடியவர்களைப் பிணித்திருக்கும் வினைகளை முருகன் அழிப்பான்.

இன்னொரு கரம் கேடயத்தை வைத்திருப்பது. மற்றொரு கரம் வேலாயுதத்தை வைத்திருப்பது. அடியவர்களுக்கு உண்டாகும் துன்பங்களை நீக்குவது கேடயத்தை வைத்திருக்கும் கரம். வேலிருக்கப் பயமில்லை என்றுணர்த்துவது வேல் வைத்திருக்கும் கரம். இவ்விரு கரங்களும் அந்தணர்களாற் செய்யப்படும்

வேள்விகளை ஏற்று அருளும் முகத்திற்குரியன. அசுரர்கள் வந்து வேள்வியை அழிக்காமல் காத்து அசுரர்களை அழிக்கும் தன்மை வாய்ந்தன.

முனிவர்களுக்குத் தத்துவங்களை அருளி, அவற்றின் பொருளை உணர்த்துவது ஒரு கரம். இன்னொரு கரம் மார்பில் மாலையோடு சேர்ந்திருப்பது. இந்நிலையில் முருகன் சின்முத்திரை தரித்த குருவாக விளங்குகிறான்.

முருகன் ஞானபண்டிதன். அதனால் அவன் ஞானகுருவாக இருக்கிறான். மனமும் குணமும் சலனமும் ஆகிய அழுக்குகள் இல்லாத துரியமுங் கடந்த துரியாதீத நிலையில் பெறும் ஆனந்த அனுபூதியைத் தருவதற்குக் காரணமான மௌன அட்சரம் ஏதும் இல்லாத முத்திரை உள்ளது ஒருகரம்.

மோன முத்திரையே மௌன நிரட்சக மந்திரம். இதை உணர்பவர்கள் துரியாதீதமாகிய சுகானுபூதியில் திளைப்பர். இந்த இரு கரங்களும் முருகப்பெருமானுடைய ஞானச்சிறப்பைத் தெளிவாகக் காட்டுகின்றன. இன்னொரு கரமானது கீழே தழுவி விழும் வளையோடு சுழன்று கனவேள்வி செய்யென்று உத்தரவிடுகிறது. மற்றொரு கரம் இனிமையான ஓசைபொருந்திய மணியை அடிக்கிறது. அவ்வோசை அடியவர்களின் நெஞ்சிற் பதிந்து அருளோசையை உண்டாக்குகிறது. அதற்கடுத்த

கரமானது அடியவர்களுக்கு அருளைப் பொழிகிறது. மற்றொரு கரம் தேவ மகளிருக்கு மாலை சூட்டுகின்றது. இவ்வாறு முருகனின் பன்னிரு கரங்களும் அடியவர்களுக்குண்டாகும் துன்பங்களை நீக்கி அருளை மழைபோலப் பொழிகின்றன.

முருகன் மலையில் இருக்கிறான், காட்டில் ஒளிர்கிறான், சமவெளியில் இயங்குகிறான், நாட்டில் திகழ்கிறான், ஆற்றோரத்திலும், குளக்கரைகளிலும் இருக்கிறான். மனிதர்கள் கூடுகின்ற இடங்களிலெல்லாம் அவர்களுக்குத் தீங்கு ஏற்படாது தடுப்பதற்காக வீற்றிருக்கிறான். மனித சஞ்சாரம் இல்லாத இடங்களிலும் இலங்குகிறான் என்று நக்கீரர் கூறுகிறார்.

மக்கள் மட்டுமன்றி தேவர்களும் முனிவர்களும் ரிஷிகளும் மிருகங்களும் பறவைகளும் முருகனை வணங்குகின்றன என்றும் நக்கீரர் கூறுகிறார். தேவமகளிர், முருகன் பெருவிருப்புடன் குடிகொண்டிருக்கும் குறிஞ்சி நிலத்திற்கு வந்து தம்மை விதம் விதமாக அலங்கரித்து நடனமாடி முருகனை வணங்குகின்றனர். இதனால் மனம் மகிழ்ந்த முருகன் அவர்களுக்கு மாலை அணிவித்து மகிழ்ச்சிப்படுத்துகிறான் என்றும் நக்கீரர் கூறுகிறார். போர்க்களத்தில் இரத்தத்தைக் குடிக்கும் பயங்கரமான பேய்களும் முருகனை வாழ்த்தி வணங்குகின்றன. இந்திரனோடு தேவர் கூட்டமும் குறிஞ்சி நிலத்திற்கு

வந்து முருகனை வாழ்த்தி வணங்கித் தமது குறைகளைக் கூறிப் பரிகாரம் பெறுகின்றனர். கொலைத் தொழிலை அஞ்சாது செய்யும் வேடர்களும் முருகனாலயத்தில் கூடிநின்று கூத்தாடி வணங்குகின்றனர். கந்தவர்களும் ஞானிகளும் கல்லாதவர்களும் மும்மூர்த்திகளும் குறிஞ்சி நிலத்திற்கு வந்து குறிஞ்சிப் பண்ணைப்பாடி வணங்கி முருகனிடம் வரம் பெற்றுச் செல்வதாக நக்கீரர் கூறுகிறார்.

ஆறு திருமுகங்களும், பன்னிரு கைகளும் பக்தர்களுக்கு வேண்டியவற்றை அளிப்பதுபோல முருகனின் பன்னிரு விழிகளும் அவனை வழிபடும் அடியார்களைப் பரிவுடன் நோக்கி வேண்டியவற்றை அள்ளிக் கொடுப்பதாக நக்கீரர் கூறுகிறார்.

ஏறுமயில் ஏறி விளையாடும் முகத்தில் உள்ள விழிகள் குறும்புத் தன்மையானவை எனினும் இரக்கமும் பரிவும் பாசமும் மிக்கவை. அடியவர்களுடன் விளையாடும் தன்மை மிக்கவை. வேண்டியவற்றை உடனே தாமதியாது வழங்கி அடியாரை மகிழ்ச்சிக்குள்ளாக்குபவை.

ஈசனுடன் ஞானமொழி பேசும் முகத்தில் உள்ள விழிகள் ஞானம் பொதிந்தவை. ஞானிகளுக்கும், முனிவர்களுக்கும், ரிஷிகளுக்கும், தேவர்களுக்கும், ஞானத்தை அடைய விரும்பும் அடியவர்களுக்கும், மாணவர்களுக்கும் ஞானத்தைக் கொடுப்பவை. சூரியனது

கதிர்களைப்போல அறியாமையை நீக்கி உண்மையை உணர்த்துபவை. மெய்ப்பொருளை உணர்த்தி ஞானத்தை வெளிப்படுத்திப் பிறப்பில்லாத நிலையை உண்டாக்குபவை. கூறுமடியார்கள் வினை தீர்க்கும் முகத்தில் உள்ள விழிகள் உண்மை நிலையைப் புரிந்துகொள்ளும் தன்மையைப் பெற்றன. அடியவர்களின் குறைகளை உணர்ந்து கருணை கூர்ந்து, அன்பு பெருக நோக்கி குறைபடுவோரின் குறைகளை நீக்கி தத்துவத்தைப் புரிய வைப்பவை.

குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகத்தில் உள்ள விழிகள் அடியார்க்குத் துணிவைக் கொடுப்பவை. துன்பம் வந்தால் அஞ்சாது வேலை நினை – துன்பங்கள் யாவும் நீங்கிவிடும். உனக்கு என்ன தேவையோ அதைக்கேள். தர்மமானவையென்றால் தருவேன் என்று கூறுபவை. வேலைப்போல உறுதியான கூர்மையுள்ள விழிகள் அவை. அதன் அருள்நிலை அசுரரையும் பணிய வைக்கும்.

மாறுபடு சூரனை வதைத்த முகத்தில் உள்ள விழிகள் மிகவும் சிவந்தவை. அருளும் சினமும் மிக்கவை. துன்பப்படுவோருக்கு அருளையும் துன்பப்படுத்துவோருக்கு அச்சத்தையும் கொடுப்பவை. துட்ட தேவதைகள், பேய், பிசாசு, பூதங்கள், செய்வினை, சூனியம், பில்லி என்பவை அடியாரைக் கண்டதும்

கிலிகொண்டு ஓட வைப்பவை. ஒருமுறை முருகாவென்றால் பலமுறை அருளுபவை. அடியவர்க்கு வரும் துன்பங்களை நீக்கி இன்பம் தருபவை. கொடுமைகளை அழித்து நிம்மதியைத் தருபவை. அஞ்சேல் என உரைத்து அடியவரைக் காப்பவை.

வள்ளியை மணம்புணர வந்தமுகத்தில் உள்ள விழிகள் காதல் உணர்வு மிக்கவை. அடியவர்களின் குடும்பப் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்ப்பவை. குழந்தைச் செல்வத்தைக் கொடுப்பவை. குழம்பிய திருமணங்களை முடித்து வைப்பவை. காதலரின் துன்பங்களை உணர்ந்து தீர்ப்பவை. காதலர்கள் முருகனுடன் வள்ளியையும் சேர்த்து வணங்கினால் காதல் சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் யாவும் இலகுவில் தீர்ந்து விடும். தலை சம்பந்தமான நோய்கள் விலகும். இளநரையுள்ளோர் வள்ளியை வணங்குதல் வேண்டும்.

குடும்பப்பிரச்சினை காரணமாகப் பிரிந்திருப்போர் முருகனுடன் தெய்வானையையும் வணங்குதல் வேண்டும். வணங்கும்போது முல்லைப்பூவால் மாலைகட்டி இருவருக்கும் சாத்தி நெய்விளக்கிட்டு வணங்கவேண்டும்.

## 5

வேல் படைக்கலமல்ல. படைக்கலம் உடலை அழிக்கும். ஆன்மாவில் படிந்துள்ள ஆணவமான

அழுக்கை அகற்றாது. அத்துடன் ஆன்மாவைப் படைக்கலங்கள் தாக்கா. அதனால் வேலை வழிபடுவோர் அகந்தையிலிருந்து நீக்கப்படுவார். அவர்களின் ஆன்மாவில் படிந்துள்ள அழுக்கான ஆணவம் சிறிது சிறிதாக மறைந்துவிட ஆன்மா வேலுடன் ஐக்கியமாகி முருகனடியை அடையும். முருகனின் அருளை அள்ளிக்கொடுப்பது திருவருளாளான வேல்.

முருகனது அன்புக்குப் பாத்திரமானவள் வள்ளி. வள்ளி வேடுவ இனத்தைச் சேர்ந்தவள். அவள் வாழ்ந்த இடம் குறிஞ்சி நிலம். பொதுவாகத் தமிழ்நாட்டில் வாழ்வோர் திருமணமானால் தமது மனைவியைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுவார்கள். இது பண்டைக்காலம் தொடக்கம் நடைமுறையில் இருந்து வரும் வழக்கம் . அது இன்றுகூட மாறவில்லை. ஆனால் முருகன் வள்ளியைத் திருமணம் செய்தபின் குறிஞ்சி நிலத்திலே உள்ள மலையில் குடிகொண்டு விட்டான். இதற்குக்காரணம் முருகனுக்கு வள்ளிமேல் இருந்த அளவற்றகாதலே. அதனால் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் முருகனைக் காதல் தெய்வமாகக் கருதியும் வழிபட்டனர். காடுகளில் மிருகங்களின் தாக்குதல்களில் இருந்து காக்கச் சொல்லி அவர்கள் முருகனிடம் முறையிட்டனர். இதைப் பின்பற்றி ஏனைய நிலங்களில் வாழ்ந்த மக்களும் முருகனைக் காதல் தெய்வமாகவும் வழிபடத் தொடங்கினார். பிற் காலத்தில் முருகன் தீராத

நோய்களையும் தீர்க்கும் தெய்வம் என நம்பினர். அதனால் தற்பொழுதுள்ள மக்கள் கந்தர்சஷ்டிக் கவசத்தை பாடுவதோடு கந்தசஷ்டி விரதத்தையும் அனுஷ்டிக்கின்றனர்.

முருக பக்தரான பாலன் தேவராஜன் இயற்றிய கந்தசஷ்டிக் கவசத்தையே இன்றுள்ள மக்களிற் பெரும்பான்மையானோர் கந்தசஷ்டி விரத வேளையில் ஓதுகின்றனர். அத்துடன் துன்பம் வந்தபோதும் அதையே ஓதுகின்றனர். தேவாரம், திருவாசகம், திருப்புகழ் ஆகியவற்றைவிடக் கந்தசஷ்டிக் கவசத்தை ஓதிப் பணன்பெறுவோரே அதிகம். அதற்குக் காரணம் முருகனது கையிலிருக்கும் வேலானது பல்வேறு வடிவங்களை எடுத்து மனித உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் காக்கிறதாக மக்கள் நம்புகின்றனர். தீராத நோய்களெல்லாவற்றையும் முருகன் தீர்த்து வைப்பான் என்றும் மக்கள் நம்புகின்றனர். இதைத்தவிர பாலன் தேவராஜன் முருக பக்தர்களைக் கண்டாலே பேய்பிசாசுகள் எல்லாம் வெருண்டு ஓடவேண்டும் என்று முருகனுக்குக் கட்டளையிடுகின்றார். மாறாத நோய்களும், தீராத துன்பங்களும் முருகனை நினைத்தவுடன் மாறிவிடும், தீர்ந்து விடும் என்று உறுதிபடக் கூறுகிறார்.

முருகனது வேல் மனிதனின் அனைத்து நோய்களையும் நீக்கி நல்வாழ்வைக் கொடுக்கும் என்பதை முருக பக்தர்கள் பலர் நிரூபித்துள்ளனர்.

அதனால் கந்தனைக் கலியுகத் தெய்வமாகக் கருதி உலகில் உள்ள அனைவரும் வணங்குகின்றனர்.

அமெரிக்கப் பாதிரியாரின் மகனான பிரட்டபிள்யூ குளோறி என்னும் அமெரிக்க இளைஞன் தமிழ்ப்புராணங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தார். அப்படிச் செய்யும் போது முருகனைப் பற்றிப் புராணங்களில் கூறப்பட்ட கருத்துக்கள் அவரை மிகவும் கவர்ந்தன. அதனால் அவர் முருகனைப் பற்றிய பல தகவல்களைச் சேகரித்தார். முருக ஆலயங்கள் அனைத்திற்கும் சென்றார். அவரின் நினைவு – கனவு முழுவதும் முருகனே நிலைத்திருந்தான். பின் அவர் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் முருகனைப் பற்றிய ஆராய்ச்சி நூலொன்றை வெளியிட்டார். அதில் முருகனது முழுவரலாறும் இருந்தது. சைவசமயப் பழக்க வழக்கங்களுக்கு அவர் புதுவிளக்கங்களைக் கொடுத்தார். ஆத்மாவைப் பற்றி ஆராய்ந்தார். சங்க இலக்கியங்களையும் கந்தபுராணத்தையும் திருக்குறளையும் ஆராய்ந்தார். அறுபடை வீடுகளுக்கும் சென்று அங்கு நடைபெறும் விழாக்களைக் கண்டார். அவற்றின் உண்மைத் தன்மையை ஆராய்ந்தார். தேங்காய் மனிதனை உருவகப்படுத்தும் சின்னம். அதற்குள்ள மூன்று கண்களில் இரண்டு பொய். ஒன்றுதான் உண்மை. தேங்காயைப் போன்று மனிதர்களுக்கும் மூன்று கண்கள் உள்ளன. அவற்றில்

இரண்டு ஊனக்கண்கள். அவை பொய்யானவை. ஆன்மா என்ற ஞானக் கண்ணே உண்மையானது. மனிதனின் திடமற்ற உள்ளத்தைப்போன்று தேங்காயின் சிரட்டை உள்ளது. இனிமையான பருப்பைப் பெறத் தேங்காயை உடைப்பதைப்போல மனிதன் தனது உண்மைத் தன்மையைக் காட்ட தன்னை உடைத்தல் வேண்டும். மனிதன் தனது பொய்மையை உடைத்தால் தெளிந்த ஆத்மாவைக் காணமுடியும். பரம்பொருளோடு இணைய முடியும் என்றார்.

முருகனைப் பற்றி ஆய்வு செய்த முதலாவது வெளிநாட்டவர் இவரென்று கூறப்படுகிறார். இவரது ஆராய்ச்சியின்படி முருகன் வலிமைமிக்க உண்மையான தெய்வம். அவனை வழிபட்டால் வழிபடுவோர் வேண்டியவரங்களைப் பெறலாம் என்று கூறினார்.

**"பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய சதுஷ்க்கு தாம்**
**தர்மஸம்ஸ்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே"**

என்று பகவத்கீதை இறைவனின் தோற்றம் பற்றிக் கூறுகின்றது. நல்லவர்களைப் பாதுகாக்கவும், தீயவர்களை அடக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் கடவுள் அவ்வப்போது அவதாரம் எடுக்கிறார் என்றும் மஹாவிஷ்ணு கூறுகிறார். பகவத்கீதையில் மஹாவிஷ்ணு முருகனாக அவதாரம் எடுத்துத்தான் அசுரர்களைத் தான் அழித்ததாக விபூதியோகத்தில் கூறுகிறார். இதன்படி கந்தபுராணம் கூறும் சேனாபதியான முருகன்

மஹாவிஷ்ணுவின் அம்சம். கந்தபுராண யுத்தத்தின் பின் அசுரர்கள் தோன்றவில்லை. அசுரத்தனமான மனிதர்களால் தான் அரக்கத்தனம் செய்யப்படுகிறது. அதை அழிக்க முருகன் ஒருவனால்த்தான் முடியும் என்று கச்சியப்பர் கூறுவதையே பாலன் தேவராஜன் தனது கந்தசஷ்டிக் கவசத்தில் கூறுகிறார். அதை சங்ககாலத்தில் நக்கீரர் கூறியிருந்தார். கந்தரலங்காரப் பாடல் ஒன்று முருகனைப்பற்றி இவ்வாறு கூறுகிறது.

**“பக்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்**
**தித்தித்திருக்கு மமுதுகண்டேன் செயன் மாண்டடங்கப்**
**புத்திக்கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்**
**தத்திக் கரைபுரளும் பரமானந்த சாகரத்தே”**

எங்கும் ஏக உருவாய் விளங்கும் பூரணத்துவமுடைய சிவனிடத்தில் இருந்து ஓர் இனிமையான அமிழ்தம். இந்த அருமையான அமிழ்தம்தான் ஆறுமுகங்களும் பன்னிரு தோள்களுமாய்த் திகழும் ஆறுமுகப்பரம்பொருள். இந்த அமிழ்தத்திற்கு எண்ணற்ற திருப்பெயர்கள் உண்டு. இந்த அமிழ்தத்தைக் கண்டால் கண்கள் பரவசமாகும். உடல் சிலிர்க்கும். முருகன் என்ற பெயரைச் சொன்னாலும், கேட்டாலும் நினைத்தாலும் வேண்டியவை கிடைக்கும். எண்ணற்ற இன்பங்கள் கிடைக்கும். இந்த அமிழ்தத்தை சரிவரப்புரிந்தோர் முத்தியின்பம் பெறுவர். இந்த இன்பத்தைப்பற்றிக் குமரகுருபர சுவாமிகள் கந்தர் கலிவெண்பாவில் பின்வருமாறு கூறுகிறார்.

**“பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்**
**அச்சம் அகற்றும் அயில் வேலும் - கச்சைத்**
**திருவரையும் சீறடியுஞ் செங்கையும் ஈராறு**
**அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் - விரிகிரணம்**
**சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்**
**எந்தத்திசைகள் எதிர்தோன்ற – வந்து இடுக்கண்**
**எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்து புகுந்து**
**உல்லாசமாக உள்ளத்திலிருந்து அருள்வான்”**

இந்து சமயத்தை ஆறாக வகுத்த ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்க ஸ்தோத்திரத்தில் முருகனின் பெருமையை வியந்து கூறுகிறார். ஆறுமுகப்பெருமானான முருகனே மனதில் உண்டாகும் துன்பங்களை நீக்குபவன். துன்பப்படுவோர் உமாதேவியின் புதல்வனான கந்தனை ஒருமுறை மனமுருகி அழைத்தால் உடன் வந்து உண்டான துன்பங்களைப் போக்குவான். மக்கள் ஆறுமுகப்பரம்பொருளான முருகனை எந்நேரமும் தியானம் செய்யவேண்டும் என்றும் கூறுகிறார்.

**“அஹம் ஸர்விதா துக்க பாராவ ஸந்தோ**
**பாவாந் தீநபந்து ஸ்த்வதந்யம்ந யாசே**
**பவத் பக்து ரோதம் ஸதர க்லுப் தபாதம்**
**மாமதிம் த்ருதம் நாசயோமா ஸுதத்வம்”**

என்று சங்கரர் சுப்பிரமணிய புஜங்கஸ் தோத்திரத்தில் கூறுவதை நாம் நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

பாம்பன் சுவாமிகள் ஒரு முருகபக்தர். அவரின் மீது குதிரவண்டி ஏறியதால் அவரது கால் எலும்பு முறிந்துவிட்டது. சுவாமிகள் தனது ஆகாரத்தில் உப்பைச் சேர்ப்பதில்லை. சிகிட்சை செய்த வைத்தியர் உணவில் உப்புச் சேர்த்தால்தான் முறிந்த காலின் பகுதி பொருந்தும் என்று கூறினார். சுவாமிகள் உப்பைச் சேர்க்காது, "முருகன் குணப்படுத்துவான்" என்று கூறிவிட்டுப் படுத்த படுக்கையாகவே இருந்தார். ஒருநாள் அவரின் படுக்கை அருகே வந்த மயில்கள் இரண்டு தமது தோகையால் பாம்பன் சுவாமிகளின் காலை வருடின. அப்போது சுவாமியின் கண்களுக்குமுன் வேல்தோன்றியது. குழந்தை ஒன்று அவரைத் தழுவியது. சுவாமிகள் சண்முக கவசம் என்ற நூலைப் பாடினார். சுவாமிகளது கால் பொருந்தியது. இன்றும் நோயுற்ற மனிதர்கள் சண்முக கவசத்தை 48 தினங்கள் பாடி நோய் குணமடைகின்றார்கள். "எந்தக் கடவுளும் என்கோன்போல் கந்தக் கடவுளை மிஞ்சாதே" என்பது பாம்பன் சுவாமிகளின் அமுதவாக்கு.

திருப்போரூரில் வாழ்ந்த சிதம்பர சுவாமிகள் கந்தன்மீது அளவற்ற பக்தி கொண்டவர். அவர் திருப்போரூரில் பாழடைந்திருந்த முருகதலம் ஒன்றைப் புணருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்வித்தவர்.

முருகப்பெருமான்மீது "திருப்போரூர்ச் சந்நிதி முறை" என்னும் பதிகத்தை நெஞ்சுருகப் பாடியவர். இப்பாடல்கள் மிகவும் இனிமையானவை. முருகனின் மனதைக் குளிரப் பண்ணுபவை. குழந்தையின் அழுகுரலைக் கேட்ட முருகனான தாய் பதைபதைத்து ஓடோடி வந்து தனது பன்னிரு கரங்களாலும் அழுவோரின் துயரைத் துடைத்து இன்பம் தருவான் என்று சிதம்பர சுவாமிகள் தனது பாடலில் குறிப்பிடுகிறார்.

**"குழவிய பூதகுரல் கேட்ட தாய் வந்**
**தழுத கண்ணீர் மாற்றிஅ முதூட்டுங் - கொழுதகைபோல்**
**நாயேன் இடர்களைந்து நல்லருளுட்டும் போரூர்ச்**
**சேயே நம் தாயாருந்தோர்"** என்பது சிதம்பர சுவாமிகளின் பாடல்.

ஆறுமுகப்பெருமானின் சேவற்கொடியையும், அழகே உருவான மயிலையும், திருக்கரத்தில் இருந்து அடியார்களின் அவலங்களைப் போக்கும் வேலையும் போற்றித் துதிப்போரை எந்தவிதமான துன்பங்களும் அணுக அஞ்சும் என்றும் சிதம்பர சுவாமிகள் கூறுகிறார்.

**"கோழிப் பதாகையுஞ் சீர்கோலமயில் வாகனமும்**
**ஆழிப்பெருக் குறிஞ்சியார் வேலும் - வாழியெனத்**
**தோத்திரஞ்செய் போரூரிற் சுந்தரனார் பேரருளோர்**

**மாத்திரையில் நெஞ்சே வரும்"**

அருணகிரிநாதர் தனது திருப்புகழில் முருகன் தான் ஆறு சமயங்களினதும் தலைவன் எனப்படுகிறார்.

**"அறுசமய சாத்திரப் பொருளோனே**

**அறிவுளறிவார்க் குணம் கடலோனே"**

என்று குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது. அத்துடன்

**"அறு சமயக்கடவுள் வேறு வேறின்றி யான் ஒருவனே யங்கங் கிருத்**

**தன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும் அறிவித்த வதனமணியே"**

என்று சிதம்பர சுவாமிகளின் திருப்போரூர் சந்நிதிமுறையும் குறிப்பிடுகின்றது.

ஆறுமுகப்பெருமானைத் தலைவனாகக் கொண்டு சமரசசன்னமார்க்க சங்கம் நிறுவி உலகிற்குச் சகோதர ஒற்றுமையைப்பற்றி உபதேசித்தவர் இராமலிங்க சுவாமிகள். இவரது பாடல்கள் முருகனை உலகின் தலைவன் என்றும், அவனை வணங்கினால் சகல பேறுகளையும் பெறலாமென்றும் கூறுகிறது.

ஆறுமுகப்பெருமானை ஒவ்வொருவரும் தமது தெய்வமாகக் கொண்டு வழிபடவேண்டும் என்றும், அப்படி வழிபட்டால் உலகில் கிடைத்தற்கரிய பேறுகள் யாவும் கிடைக்கும் என்றும் சங்கரர் கூறுகிறார். அவர்

அருளிய ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கத்தின் 28ஆவது பாடல் மேலே சொன்னவற்றைக் கூறுகிறது.

வேதகாலத்திலிருந்து நாம் அர்ச்சனை செய்யும் முறை இருந்து வருகிறது. முருகனுக்கு இலத்சத்து எட்டு நாமங்கள் உள்ளன. அவற்றைப் பக்தர்கள் உச்சரிக்கும்போது முருகன் மிகவும் மகிழ்ச்சியடைவதாக அருணகிரிநாதர் சொல்கிறார். முருகன், கந்தன், குமரன், மயில்வாகனன், காங்கேயன், சுவாமிநாதன், சரவணபவன், வள்ளிமணாளன், விசாகன், தேவசேனாதிபதி, சூரசங்காரன் போன்ற பல நாமங்கள் உள்ளன. ஆறுமுகப்பெருமானது நாமத்தைச் சொன்னால் இன்பம் வந்துசேரும், வினைகள் தொலைந்துபோகும், மலைபோல உள்ள துன்பங்கள் மடுபோலாகும். அதனால் முருகனது நாமத்தை எப்பொழுதும் சொல்லப்பழகுதல் வேண்டும்.

முருகனை நினைத்து நினைத்து உருகி உருகி முருக நாமத்தை உச்சரிப்போரின் முன் அச்சம் தரும் காலனின் முகம் தோன்றாது. முருகப்பெருமானின் கருணையுள்ள ஆறுமுகங்கள் தான் தோன்றும். உயிர் பிரியும் வேளை முருகனை நினைத்தால் வேல்தோன்றும் ஒருமுறை முருகா என அன்புடன் அழைத்தால் முருகன் வேண்டும் வரமளிப்பான் என்று திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கூறுகின்றார்.

**“அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்**
**வெஞ்சமரில் அஞ்சேலென வேல் தோன்றும் நெஞ்சில்**
**ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்**
**முருகா என்றோதுவார் முன்”**

“சரவணபவ”என்ற ஆறு எழுத்துக்கள் முறையே செல்வம், கல்வி, முக்தி, பகைவெல்லல், காலஜெயம், ஆரோக்கியம் முதலிய ஆறுபேறுகளைத் தருபவை. இவ்வாறு எழுத்தில் உலகில் உள்ள ஏழுகோடி மந்திரங்களும் அடங்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

திருப்புகழ் இவ் ஆறு எழுத்துப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.

**“வசன மிக வேற்றி - மறவாதே**
**மனது துயராற்றில் - உழலாதே**
**இசை பயில் சடாட்சர - மதனாலே**
**இகபர சௌ பாக்கியம் - அருள்வாயே”**

ஆறு எழுத்து மந்திரமான “சரவணபவ” என்ற மந்திர சக்திவாய்ந்த முருக நாமத்தை ஒரு மனதோடு உச்சரித்து திருநீறு தரித்தால், முத்திகிடைக்கும். இடர் எதுவும் வராது என்று ஆறெழுத்தின் மகிமையைத் திருப்புகழ் கூறுகிறது.

முருகன் என்ற நாமம் தெய்வத்தன்மையும் , மாறாத அழகும், குன்றாத இளமையும் கொண்டது. முருகா என்று மனமுருக ஓதினால் ஓதுபவர்களுக்கு

அருளும் அழகும் இளமைத் தன்மையும் உண்டாகும். முருகன் என்ற நாமம் குழந்தைத் தன்மைக்குரியது. எனவே முருகனைக் குழந்தையாக எண்ணி வணங்குவோர் ‘‘முருகா’’ என்ற நாமத்தை உச்சரித்தல் வேண்டும். இதைப்பற்றிச் சிதம்பர சுவாமிகளின் பாடல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**‘‘முருகா என உனை ஓதும் தவத்தினர் மூதுலகில்**
**அருகா செல்வம் அடைவர், வியாதி யடைந்து நையார்**
**ஒருகாலமும் துன்பம் எய்தார், பரகதி யுற்றிடுவார்**
**பெருகாலன் நாடுபுகார் சமராபுரிப் புண்ணியனே’’**

குமரன் என்ற சொல் இளமையைக் குறிக்கும். குமரா என்று உச்சரித்தால் பிறவி மயக்கத்தை ஒழிக்கும் என்கிறார் நக்கீரர். ‘‘குத்ஸிதாந் குதாமிதாந் மாரயதீதி குமார’’ என்றால் ஆணவத்தை ஒழிப்பவன் என்று ஆதிசங்கரர் கூறுகிறார். குமரா என்ற சொல் ‘‘மரா’’ என்ற இரு சொல்லும் ராம அவதாரம் எடுத்த மகாவிஷ்ணுவைக் குறிப்பதாகவும், இதனால் ராமனும் குமரனும் ஒரே தெய்வமென்றும் சொல்வாருளர். ‘‘குகன்’’ என்ற நாமம், பக்தர்களின் உள்ளக் குகையில் வீற்றிருப்பவன் என்பதைக் குறிக்கிறது. ‘‘ஆதரிப்போருக்கு ஆருயிராய் அன்பர்களின் இதயமாகிய தாமரையில் மீதிருக்கும் தெய்வ விளக்கொளி குகன்’’ என்கிறார் குமரகுருபர சுவாமிகள். ‘‘உள்ளந் தனிலே உவமையிலா ஆனந்த

வெள்ளம் தளும்ப விளையாடும் பிள்ளை'' என்கிறார் சிதம்பர சுவாமிகள்.

"எப்பொழுதும் குகனை மனதிலிருத்தி வணங்குக'' என்று சொல்கிறது ஸ்ரீ சுப்பிரமண்ய புஜங்கம்.

"கந்தன்'' என்ற நாமம், ஒன்று சேர்ந்தவன் . இளகிய மனதை உடையவன், சர்வவல்லமை உள்ளவன் என்று பொருள் தருகிறது. அத்துடன் எவ்வித பாரபட்சமுமின்றி அருவமாக நிற்கும் தத்துவப் பொருள் என்றும் சொல்கிறது. இதை நச்சினார்க்கினியார் பின்வருமாறு கூறுகிறார்.

**"சார் பினால் தோன்றாதுதான் அருவாய் - எப்பொருட்டும்**
**சார் பென நின்றெஞ்ஞான்றும் இன்பம் தகைத்தரோ**
**வாய்மொழியான் மெய்யான் மனத்தான் அறிவிறந்த**
**தூய்மை தாம் மைதீர் சுடர்''**

"ஆறுமுகம்'' என்ற நாமம் ஆறு திருமுகங்களை உடையவனென்றும் எல்லா நலன்களையும் தருபவன் என்றும் பொருள் கொள்கிறது.

**"ஆதியொடு அந்தமாகிய நலன்கள்**
**ஆறுமுகமென்று தெரிவேனே''** என்கிறார் அருணகிரிநாதர்.

முருகப்பெருமானது திருமுகங்கள் ஆறும் வேதங்களும் உபநிடதங்களும் வலியுறுத்தும் ஜீவாத்மா பரமாத்மா பற்றி விளக்கும் ஆறு மகாவாக்கிய

மந்திரங்கள் என்றும் சொல்லப்படுகிறது. இதனைச் சங்கரர் ‘‘மஹாவாக்ய கூடம்’’ என்கிறார்.

முருகன் தனது முகத்தால் தான் ‘‘ஞானமயமானவன்’’ என்றும், இரண்டாவது முகத்தால் தான் ‘‘தோற்றமற்றவனாயினும் உயிரைப்போன்று பிரத்தியக்சமே’’ என்றும், மூன்றாவது முகத்தால் ‘‘தானும் உயிரும் வேறல்ல’’என்றும் , நான்காவது முகத்தால் ‘‘தானும் உயிரும் ஒன்று’’ எனவும் , ஐந்தாவது முகத்தால் ‘‘ எல்லாம் இறைவன் மயம்’’ என்றும் ஆறாவது முகத்தால் ‘‘எல்லா உயிர்களும் இன்புற வேண்டும்’’ என்றும் உணர்த்துகிறான். இதன் மூலம் ஆணவ அழுக்கைப் போக்குகிறான். ஆன்மாவிற்கு அன்பு மயமான நிலை ஏற்பட்டு ஆணவம் அகன்றவுடன் முருகப்பெருமான் தனது ஐந்தாவது முகத்தால் உயிர்களைப் பற்றிப்பிடித்துள்ள கன்மம், மாயை ஆகிய தளைகளை அகற்றித் தனக்கும் உயிர்களுக்குமிடையே உள்ள பேதத்தை நீக்கி, ஆறாவது முகத்தால் உயிர்களைத் தன்னுடன் சேர்த்துப் பேரின்பமயமான முத்தியின்பத்தைக் கொடுக்கிறார்.

முருகப் பெருமான் இவ்வாறு ஆன்மாக்களைப் பற்றிப் பிடித்திருக்கின்ற ஆணவ இருளைப்போக்குவதால், அவனை குருநாதனாகவும்

ஞானபண்டிதனாகவும் அருணகிரிநாதர் பழனித் திருப்புகழில் வர்ணிக்கிறார்.

**“நாதவிந்துக லாதீ நாமோ நம**
**வேத மந்திர சொரூபா நமோ நம**
**ஞாணபண்டித ஸாமி நாமோ நம வெகுகோடி**
**நாம சம்புகு மாரா நாமோ நம**
**நாக பந்தம் யூரா நாமோ நம பரசூரர்**
**சேத தண்டவி நோதா நமோ நம**
**கீதகிண்கிணி பாதா நமோ நம**
**தீர சாம்ப்ரம வீரா நமோ நம கிரிராஜ**
**தீப மங்கள ஜோதீ நமோ நம**
**தூய அம்பல லீலா நமோ நம**
**தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்”**

இத் திருப்புகழைப் பாராயணம் செய்து தினமும் பாடி வந்தால் முருகன் மகிழ்ந்து ஆறு முகங்களாலும் அருள்வான் என்கிறார் அருணகிரிநாதர்.

மயில்வாகனன் என்றால் மயிலை வாகனமாக உடையவன் என்றும், வேலாயுதன் என்றால் வேலாயுதத்தைத் திருக்கரத்தில் தாங்கி அருள்புரிபவன் என்றும் பொருள் கொடுக்கிறார் அருணகிரிநாதர்.

யானை, மயில் , ஆட்டுக்கடா, என்பன முருகனுக்கு வாகனங்களாயினும் முருகனது விருப்புக்குரிய வாகனம் மயிலாகும். மயில்மீது முருகன்

அமர்ந்திருந்து அடியவர்களுக்கு அருளும் வரங்கள் அழியாதன. வேதங்கள் கூறும் மஹாமந்திரமாக மயில் போற்றப்படுகிறது. வேதம் மயிலென்றும் வேதாந்தங்களின் தொடக்கத்திலும் இறுதியிலும் இடையிலும் போற்றிக் கூறப்படும் பிரணவப் பொருளான ஓங்காரமே ஆறுமுகப்பெருமான் என்றும், பிரம்மவித்தை என்னும் ஞானமே வேல் என்றும் அருணகிரிநாதர் கூறுகிறார். மயில்வாகனனான முருகனை வணங்குவோர் தாம் விரும்பியவற்றை எல்லாம் பெறுவர் என்றும் இலகுவில் முத்தியின்பத்தைப் பெறுவர் என்றும் சங்கரர் கூறுகிறார். ‘‘வேத ஏவ மயூரஸ்யாத் ப்ரணவப் ஷண்முகஷ்தா’’ என்று ஸ்கந்தபுராணம் கூறுகிறது. ‘‘ஆன தனி மந்த்ர ரூபநிலை கொண்ட தாகு மயிலென்பதறியேனே’’ என்று அருணகிரிநாதர் மயிலின் சிறப்பினைப் பாடுகிறார். மயிலைப் போற்றித் துதிப்போர் சகல செல்வங்களையும் சிறப்பையும் , அழியாத வரத்தையும் பெறுபவர் என்றும் கூறுகிறார்.

முருகனின் வேலைப் பற்றிப் பலர் விதந்து பாடியுள்ளனர். பாலன் தேவராஜன் சுவாமிகள் கந்தசஷ்டிக் கவசத்தில் முருகனது வேலை, அழகுவேல், புனிதவேல், கதிர்வேல், நல்வேல், பெருவேல், முனைவேல், செவ்வேல், இனியவேல், வடிவேல், திருவேல், அருள்வேல், பருவேல், அயில்வேல், கருணைவேல், முரண்வேல், நல்வேல், எதின்வேல், கனகவேல்,

வச்சிரவேல், அணையவேல், சதுர்வேல் என்றும் கூறுகிறார். அத்துடன் அவற்றைப்பற்றியும் கூறுகிறார்.

வேலை ‘‘படையரசு’’ என்று பாம்பன் சுவாமிகளும் சக்தி படைத்த தெய்வமென தண்டபாணி சுவாமிகளும் போற்றுகிறார்கள். ‘‘திருவருள் சக்தி வடிவமான வேல்படை எண்ணில், வேதாகமங்கள் பகர்ந்த தெய்வத் துருவமெல்லாம் அது தானாக விளங்கிடும் உண்மையதே’’ என்று வேல் அலங்காரம் கூறுகிறது. ‘‘என்கோன் படைவேல் துணையுண்டு எமக்கொரு நாளும் பயமில்லை’’ என்று சிதம்பர சுவாமிகள் சொல்கிறார். ‘‘வினை ஓட விடுங்கதிர்வேல் மறவோன்’’ என்று கந்தர் அநுபூதி சொல்கிறது. ‘‘ஆறுமுகமவன் வேலும், திருக்கையும் உண்டே நமக்கு ஒரு மெய்துணையே’’ என்று கந்தரலங்காரம் சொல்கிறது. ‘‘கிரௌஞ்ச மலையைப் பொடிப்பொடியாக்கிய வேலைப் போற்றி வணங்குபவர்களுக்கு கொடிய மிருகங்களாலும், பறவைகளாலும் , கொடுமையான வியாதிகளாலும், கிரகதோசங்களாலும் எந்தப் பாதிப்புக்களும் ஏற்படாதென்று ஆதிசங்கரர் கூறியிருக்கிறார்.

வேல் என்றும் பக்தர்களுக்கு உறுதுணையாக இருக்கும். வேலை வணங்குவோருக்கு யாராவது தீங்கு செய்ய எண்ணுவார்களானால் அவர்களது குலத்தையே வேல் நாசம் செய்துவிடும். முருகனது

நாமத்தையும், அவனைப் போற்றும் பாடல்களையும் ஓதுவோர்க்கு துன்பம் உண்டானால் வேல் சீறி எழுந்து வந்து ஓதுபவர்களைக் காப்பாற்றும். முருகனின் அடியவர்கள் செல்லுமிடங்களெல்லாம் வேல் அவர்களுக்குப் பின்னாலும் , முன்னாலும் இருபக்கமாகவும் சென்று காவலளித்துக் காப்பாற்றும்.

**“துதிக்கும் அடியவர்க் கொருவர் கெடுக்கவிடா**
**நினைக்கினவர்**
**குலத்தை முதலறக் களையுமேலைக்கோர் துணையாகும்**
**தனித்து வழி நடக்குமென திடத்துமொரு வத்துமிரு**
**புறத்து மரு சுடுத்திரவு பகற்றுணைய தாகும்**
**துளத்திலுறை கருத்தன் மயிடைத்து குகன்வேல்”**

என்று வேல்வகுப்பு என்ற பாடற் செய்தி கூறுகிறது. தோகைமேல் உலாவுங் கந்தன் சுடர்க் கரத்திருக்கும் வெற்றி வாகையே சுமக்கும் வேலை வணங்குவது எமக்குவேலை’’ என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வேலைப்போற்றிப் பாடுகிறார்.

குறிஞ்சிக் குமரனான கந்தனை வணங்குவதற்கு மந்திரங்கள் தேவையில்லை. மனமுருகி முருக நாமத்தை மனத்துள் சொன்னாளே போதும். முருகனது வேல் வந்து மனதில் உறையும். குறிஞ்சி நில மக்களான திராவிடர் முருகனுக்குப் பொங்கிப் படைத்து வெறியாட்டு,கரகம், காவடி(உரு) ஆடியே வணங்கினார். “வேல் வேல்’’ என்றும், வேல் முருகனுக்கு அரோகரா’’

என்றும், “முருகா சரவணபவா” என்றும் கூறி வணங்கினார்களே தவிரப் பிராமணரைக் கொண்டு வேள்விகளோ, கிரியைகளோ செய்யவில்லை. அதற்கான குறிப்புக்களும் பண்டைய நூல்களில் இல்லை. அதனால் முருகனை மனமுருகி வணங்கிப் பயன்பெறலாம். இதை அருணகிரிநாதர் மிகவும் அழகாகத் திருப்புகழில் கூறுகிறார்.

**“அனலகடல் வளைந்து டுத்த வெழுபுவி புரந்திருக்கும்**
**ஆசெசு நிரந்த ரிக்கவாழாலாம்**
**அளகையாசன் றனக்கும் அமரர் அரசன்றனக்கும்**
**அரசென அறஞ்செலுத்தி யாளலாம்**
**அடைபெறுவ தென்று முத்தி யதிமதுர செந்தமிழ்க்கும்**
**அருள்பெற நினைத்து சித்தியாகலாம்:**
**அதிவருமென்று முட்ட அகில் வினை சண்டைநிற்க**
**அடலெதிர் புரிந்து வெற்றியாகலாம்!**
**எம படர் தொடர்ந் தழைக்கில வருட னெதிர்ந்து ளுட்ட**
**இவுலென முழங்கி வெற்றி பேசலாம்**
**இவையொழிய வும்பலிப்ப தகலவிடு முங்கன் வித்தை**
**யினை யினி விடும்பொருத்த பாருளீர்**
**மலையிறை மடந்தை பெற்ற வொரு மதலை**
**மலையிடிய ருந்துணித்த தோளினான்**
**மயிலையு மலன்றிருக்கை யயிலையு மவன்**
**ணியலையு நினைந் திருக்க வாருமே”**

முருகனை வழிபட்டால் அரசனைப்போல் வாழலாம் குபேரனைப்போல தனவந்தனாகலாம் இந்திரனைவிடச் சுகபோகங்களை அனுபவிக்கலாம் செந்தமிழில் புலமை பெறலாம் பகையை முற்றாக ஒழிக்கலாம் என்று அருணகிரிநாதர் சொல்கிறார்.

சேவற்கொடியோன் என்ற சொல் பிரணவ தத்துவத்தின் நாத தத்துவத்தை விளங்குகின்றது. இதனைக் கந்தரனுபூதி, “ஆடும் பரிவேல் அணி சேவலெனப் பாடும் பணியே பணியாய் அருள்வாய்” என்று கூறுகிறது திருப்புகழ். “ஏழுலோகமும் வாழ்வான சேவற்கொடி” என்று போற்றுகிறது. உலக இருளை அகற்றச் சூரியன் உதயமாவதை வரவேற்றுச் சேவல் கூவி மனிதர்களை எழுப்பி, அவர்களின் மன அழுக்கை நீக்கும்படி கூவிச் சொல்கிறது. “ முருக நாமத்தைச் சொல்லு உன் துயரமெல்லாம் பறக்கும்” என்றும் கூறுகிறது. மயிலுக்கும் வேலுக்கும் உள்ள பெருமை சேவலுக்கும் உண்டென்றும் சேவல் விருத்தம் கூறுகிறது.

**“அச்சப்படக் குரல் முழக்கிப் பகட்டியவறிக் கொட்ட மிட்ட**
**மரிடும்**
**அற்பக் குறப்பலிகள் வெட்டுக்கள் பட்டுக்கடி அறுகுழைகளைக்**
**கொத்தியே**
**பிச்சுச் சினத் துதறி எட்டுத்திசைப் பலிகள் இட்டுக் கொத்தி**
**விறேல**
**பெற்றுச் சுடர்ச் சிறகு தட்டிக் குத்தியல் பெறக் கொக்கரித்து**

**வருமாம்’’**

எங்கிருந்து நினைத்தாலும் சேவற்கொடியோன் ஓடோடி வருவான் என்பதை “சேவல் விருத்தம்’’ பின்வருமாறு கூறுகிறது.

**“சென்றே யிடங்கள் தந்தா வெனும் பொழுது**
**செஞ்சேவல் கொண்டு வரவேண்டும்’’**

ஏழு உலகங்களையும் சேவற்கொடியோனே வாழவைக்கிறான் என்றும் சேவல் விருத்தம் கூறுகிறது.

“ஏழு லோகம் வாழ்வான சேவற்கொடியோனே’’ என்றும் “அரியகுருகு கொடி எங்கும் தளைத்தருள்’’ என்றும் அருணகிரிநாதர் பாடுகிறார். வேலைக் காண்பதும் மயிலைக் காண்பதும் எவ்வேளையிலும் நடைபெறாது. சேவலை எங்கும் காணலாம். சேவலைக் கண்டாலும் அதன் குரலைக் கேட்டாலும் சேவற்கொடியோனான முருகனின் நினைப்பு அடியார்க்கு உண்டாகுதல் வேண்டும் என்று அருணகிரிநாதர் கூறுகின்றார்.

“கலியுகத்திற்குரிய தெய்வம் கந்தனே’’என்று சாத்திர நூல்கள் பலவும் கூறுகின்றன. “சனத் குமார சம்ஹிதை’’ என்ற நூல் கலௌ குஹம் பரித்யஜ்ய ந்ருணாம் ஸர்வார்த்த தாயகம் நகிஞ்சிதாப்தி’’ என்று கூறுகிறது. இதன் அர்த்தம் , “கலியுகத் தெய்வம் குகன்’’ என்பதே. கந்தனைத் தொழுபவர்களுக்குக்

கலியின் கொடுமையும் யமபயமும் இருக்காது என்று வடமொழி ஸ்காந்தபுராணம் கூறுகிறது, ‘‘ஸ்கந்ததஸ்ய அதுலாம் கீர்த்திம் கலிகல்மஷ நாசிம்’’ என்கிறது.

முருகனுக்கு மாவிளக்கு என்னும் உணவே பிடிக்கும். அதனால் முருக பக்தர்கள் தேனும் தினைமாவும் கலந்து விளக்குப்போல் செய்து வாழைத்தண்டு, தாமரைநூல் கொண்ட திரியைப் பசுநெய்யிட்டுக் கொழுத்தினால் குழந்தையில்லாதவர்க்குக் குழந்தைப்பாக்கியம் கிடைக்கும். குருபகையானவர்கள், குருவால் பாதிக்கப்பட்டோர், சுக்கிரதிசை நடப்பவர்கள், சுக்கிரன் நீசம் பெற்றவர்கள், இளவயதில் சுக்கிரதிசை நடப்பவர்கள், சனிதிசை நடப்போர், ஏழரைச்சனி, அட்டமத்துச் சனியால் பாதிக்கப்படுவோர் முருகனின் கோவிலுக்குச் சென்று வழிபட்டு மாவிளக்கிட்டால் அவர்களைப் பிடித்த தோசங்கள் யாவும் நீங்கும். இதனால் தான் முருகனைக் கலியுகத் தெய்வமென்று நூல்கள் கூறுகின்றன.

முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ், ‘‘நாலந்தவேதத்தின் பொருளோனே, நானென்று மார்தட்டும் பெருமானே,’’ என்ற அடி பக்தர்களைக் காக்க என்றும் எப்பொழுதும் தயாராக இருப்பவன் முருகன் என்று கூறுகிறது. பக்தர் கூடியிருக்குமிடங்களுக்கு முருகன் வலியச் செல்பவன் என்பதைத் திருப்புகழ் ‘‘மாசிலடியார்கள் வாழ்கின்றவூர் என்று

தேடிவினையாடியேயிங்கனே நின்று வாழும் மயில் வீரனே'' என்று கூறுகிறது.

**மொழியும் அடியவர்கள் கோடிகுறை கருதி னாதும் வேறு**
**முனிய அறியாத தேவர் பெருமானே'' என்றும்,**
**"யார்வேண்டினாலும் கேட்ட பொருளீயும்**
**தியாகங்க சீலம் போற்றியும்'' என்றும்**
**"தொழுது வழிபடுமடியார் காவற்காரப் பெருமானே''** என்றும், அருணகிரிநாதர் பாடுகிறார்.

**"அடியார் உள் நினைவது உன்னடி**
**ஒளியொடு குளிர்வது உன்முகம்''**

என்று ஈசான தேசிக சுவாமிகள் பாடியுள்ளார்.

**"ஐய நின் சீர்பேசு செல்வர்வாய் நல்ல தென்னமு**
**துண்டு உவந்த திருவாய்**
**அப்பநின் திருவடி வணங்கினோர் தலைமுடி**
**அணி தோங்கி வாழுந்தலை**
**மெய்யநின் திருமேனி கண்ட புண்ணியர் கண்கள்**
**மிக்க ஒளி மேவு கண்கள்''**

என்று அருட்பிரகாச வள்ளலார் பாடுகிறார்.

“வைதாரையும் மங்கு வாழவைப்போன்” என்று கந்தரலங்காரம் கூறுகிறது. வேடர்குலக் கொடியான வள்ளியை மணந்த தேவசேனாதிபதி மஹாவிஷ்ணுவின் உருவெடுத்து இராவணனது பத்துத் தலைகளையும் கொய்தான் என்றும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் என்று சிதம்பர சுவாமிகள் கூறுகிறார்.

காளமேகம் முருகனை நிந்திப்பதுபோலப் புகழ்ந்து பாடிய பாடல் இது.

**“அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி**
**ஒப்பரிய மாமன் உறிதிருடி – சப்பைக்கால்**
**அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத்தானுக்கிங்**
**கெண்ணும் பெருமை இவை”.**

மேலெழுந்தவாரியாக இப்பாடல் கேலிக்குரியதாக இருந்தாலும் சிவக்குடும்பத்தின் தத்துவத்தை எடுத்து இயம்புவது.

கலியுகவரதனாகிய முருகப்பெருமானது வரலாற்றை வடமொழியில் “ஸ்கந்தம்” எனவும் தமிழ்மொழியில் “கந்தபுராணம்” என்றும் சொல்லப்படுகிறது. வியாச முனிவர் ஸ்கந்தத்தையும் அதைத் தழுவி கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தையும் பாடினார். முருகனது பெருமைகளைப் பாகவதம் முதலிய புராணங்களிலும் இதிகாசங்களிலும் காணலாம். மகாகவி காளிதாசன் முருகனின்

பெருமைகளைக் “குமாரசம்பவம்” என்னும் காவியத்தில் கூறியுள்ளார். இந்நூல் பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

பண்டைய இலக்கியமான தொல்காப்பியம் முருகனைப் பற்றிக் கூறியவற்றையே இன்று வாழ்ந்து வரும் முருகனின் அடியவர்களும் கூறி வருகிறார்கள். இன்று பெரும்பாலான மக்கள் படிப்பது “கந்தர் சஷ்டிக் கவசம்” என்னும் நூலே.

**“எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்**
**எத்தனை அடியேன் எத்தனை செயினும்**
**பெற்றவள்னீ குருபொறுப்பதுன்கடன்**
**பெற்றவள் குறமகள் பெற்றவளாமே**
**பிள்ளை யென்றன் பாய்ப் பிரியமளித்து**
**மைந்தனென் மீதுன் மனமகிழ்தருளித்**
**தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்”**

என்று பாலன் தேவராஜன் சொல்வதை இன்று இந்துக்கள் முழுப்பேரும் சொல்கிறார்கள். நோய்கள் துன்பங்கள் வந்தபோது கந்தசஷ்டிக் கவசத்தைப் படிக்கிறார்கள். இலங்கையில் உள்ள தலங்களுள் மிகவும் பிரசித்தமானவையும் மக்கள் திரண்டு சென்று வணங்குபவையும் முருகனின் கோவில்களே. கதிர்காமம், நல்லூர்க் கந்தன், செல்வச்சந்நிதிக் கந்தன் ஆகிய முருக தலங்களில் தான் மக்கள் கூடுதலாகக் கூடுகின்றனர். அதைவிடக் காவடி எடுப்பதும்

இத்தலங்களில் உள்ள முருகனுக்குத் தான். பண்டைய காலத்தில் குறஞ்சி நில மக்கள் எவ்வாறு முருகனைத் தரிசித்தார்களோ அவ்வாறு இன்று தரிசிக்கப்படும் ஆலயம் செல்வச்சந்நிதி யாகும்.

**“உருவாய் அருவாய் உளதாய் இலதாய்**
**மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்**
**கருவாய் உயிராய் கதியாய் விதியாய்**
**குருவாய் வருவாய் அருள்வாய் குகனே”**

என்று கந்தரநுபூதி சொல்கிறது. பொதுவாக இது கடவுளின் இலக்கணம் என்றபோதும் முருகனுக்கே இது சிறப்பாகக் கூறப்படுகின்றது. இதைக் கந்தபுராணம்,

**“அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்”** என்று கூறுகிறது. இதனால்தான் கந்தனைக் கலியுகத் தெய்வம் என்று இந்துசமய சாத்திர நூல்கள் கூறுகின்றன. கந்தன் சிவனது மைந்தன் என்று கூறுவதைவிடச் சிவன் என்று கூறுவதையே கந்தபுராணமும் ஸ்கந்தமும் விரும்புகிறது. வேதகாலத்தில் வாழ்ந்தவர்கள் தாம் ஆகுதிகளைச் சமர்ப்பிதற்கு எந்தத் தெய்வம் உயர்ந்தது என்று தெரியாது தடுமாறியதாக வேதங்கள் கூறுகின்றன. அதன்பின் சிவன் முழுமுதற்கடவுளானான். சிவன் மக்களின் நலனுக்காகத்

திருவிளையாடல்கள் பலவும் புரிந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அத்துடன் இறைவன் அவதாரம் எடுத்து மக்களைக் காப்பாற்றுவதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

அவதாரம் என்பது கீழ்நோக்கி இறங்கல் எனப்பொருள் தருகிறது. ஆண்டவனின் அவதாரம் உயர்வு தாழ்வற்றது: விருப்புவெறுப்பில்லாதது: மக்களது துன்பங்களைப் போக்கி அவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பம் கொடுப்பதற்காகவே இறைவன் அவதாரமெடுப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. வேதகால மக்களைப் போலல்லாது அதன்பின் வாழ்ந்த மக்கள் தமது தெய்வம் எது என உணர்ந்து வணங்கி இன்பமடைந்தனர். அதற்குச் சான்றாக நாயன்மார்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

சிவன் முருகனாக அவதாரம் எடுத்த பின்பு கலியுகத்திற்குரிய தெய்வமாக முருகனே இருக்கிறான் என இந்துசாத்திர நூல்கள் கூறுகின்றன. அதை நம்பி மக்களும் முருகனைத் தெய்வமாகப் பூசிக்கின்றனர். இந்து சமயத்தில் உள்ள அத்தனை தெய்வங்களையும் ஒன்றாக வணங்கி அவர்களின் அருளைப்பெற முருகவழிபாடு உதவி செய்யும். அதன் வரலாற்றைப் பல நூல்களில் இருந்து பார்த்தோம். அதனால் கலியுகவரதனான முருகனை வணங்கிச் சகல இன்பங்களையும் பெற்று வாழ்வோமாக.

**6**

கந்தசஷ்ட்டிக்கவசத்தையும் திருப்புகழையும் மருந்து என்றும் அமிழ்து என்றும் சமயப்பெரியார்கள் பலர் கூறியுள்ளனர். மருந்து நோய்கள் தீரப் பயன்படும். அமிழ்து பிறவிப் பெருங்கடலை அகற்றும் என்று எல்லோருக்கும் தெரியும். முருகன் ஓர் இசைப்பிரியன். அதனால் அவனுக்கு இசையுடன் பாடுபவர்களைப் பிடிக்கும். பண்ணோடு திருப்புகழைப் பாடினால் கேட்போரின் உள்ளம் கரைந்து உருகும். அதனால் மிகவும் சிறந்த திருப்புகழ் ஒன்றை இப்புத்தகத்தில் தருகிறேன். அதைத் தினமும் ஓதுங்கள். ஓதுவோர் எல்லா இன்பங்களையும் பெறுவர்.

கந்தசஷ்டிக் கவசம் பயத்தை நீக்குவது எதிரிகளுக்கு அச்சத்தைக் கொடுப்பது. போல பிசாசுகளை விரட்டுவது. கந்தசஷ்டிக் கவசமோதுமிடம் புனிதமடையும். அதனால் அடியவர்கள் தினமும் ஓதுவதற்காகக் கந்தசஷ்ட்டிக் கவசத்தையும் இதில்

இணைத்துள்ளேன். மருந்தாகவும் விருந்தாகவும் செயற்படும் திருப்புகழையும் கந்தசஷ்ட்டிகவசத்தையும் தினமும் ஓதுங்கள். இயலாதவர்கள் வெள்ளிக்கிழகைளிலாவது ஓதுங்கள். நிறைந்த பயன்களைப் பெறுவீர்கள்.

# திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
  அத்திக்கிறை சத்திச் சரவண
  முத்திக்கொரு வித்துக் குருபர          எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
  முற்பட்டது கற்பித் திருவரு
  முப்பத்துமு வர்க்கத் தமரரு          மடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணையொடு
  ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
  பட்டப்பகல் வட்டத் திகிரியி          லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
  பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
  பஷத்தொடு ரஷித் தருள்வது          மொருநாளே
தித்திக்தெய வொத்தப் பரிபுர
  நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
  திக் கொட்க நடிக்கக் கழுகொடு          கழுதாடக்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமானே

## கந்தசஷ்டிக்கவசம்

"துதிப்போர்க்கு வல்லினைபோம், துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

" அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி".

"சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்

கையில் வேலால் எனைக் காக்க வென்று வந்து

வரவர வேலாயுதனார் வருக

வருக வருக மயிலோன் வருக

இந்திரன் முதலா எண்டிசை போற்றி

மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக

நேசக் குறமகள் நினைவோன் வருக

ஆறுமுகம் படைத்த ஐயா வருக

நீறிடும் வேலவன் நித்தம் வருக

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

சரவண பவனார் சடுதியில் வருக

ரவண பவச ரரரர ரரர

ரிவண பவச ரிரிரிரி ரிரிரி

விணபவ சரவண வீரா நமோ நம

நிபவ சரவண நிறநிற நிறென

அசுரர் குடிகெடுத்த ஐயா வருக

என்னை ஆளும் இளையோன் கையில்

பன்னிரண்  டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள்  பன்னிரண்டு இலங்க

விரைந்து எனைக் காக்க வேலோன் வருக

ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்"
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலிமுழங்க

மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென

டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர

ரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடு டுடுடு டுடுடு டுடு

டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு

விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து

எந்தனை யாளும் ஏரகச் செல்வ

மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்

லாலா லாலா லாலா வேசமும்

லீலா லீலா லீலா விநோதன் என்று

உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்

என்தலை வைத்து உன் இணையடி காக்க

என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க

பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க

கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க

விழிசெவி இரண்டும் வேலவர் காக்க

நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க

செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க

என் இளம் கழுத்தை இனியவேல் காக்க

மார்பை இரத்தின வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க

வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க

பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க

பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க

சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க

நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க

ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க

பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வல்வேல் காக்க

பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல

வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு  கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட வி‘ங்கள் கடித்து உயர் அங்கம்

ஏறிய வி'ங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகளொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை

இடும்பனை அழித்த இனியவேல் முருகா

தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்து உறை கதிர்வேல் முருகா

பழநிப் பதிவாழ் பால குமாரா

ஆவினன் குடிவாழ் அழகிய வேலா

செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா

சமரா புரிவாழ் சண்முகத்து அரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்

என்நா இருக்க யான் உனைப் பாட

எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்

பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக

ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியில் அணியப்

பாச வினைகள் பற்றது நீங்கி

உன்பதம் பெறவே உன் அருளாக

அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்

மெத்த மெத்தாக வேலா யுதனார்

சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க

வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசம்

வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்

எத்தனை அடியேன் எத்தனை செயினும்

பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே

பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து

மைந்தன் என்மீதுன் மனமகிழ்ந்து அருளித்

தஞ்சம் என்றடியர் தழைத்திட அருள்செய்

காலையில் மாலையில் கருத்துடன் நாளும்

ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி

நேச முடன் ஒரு நினைவது ஆகி

கந்தர் சஷ்டி கவசம் இதனை

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்

ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு

ஓதியே செபித்து உகந்து நீறு அணிய

அட்ட திக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்

திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்து அடி
அறிந்து எனதுள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாகச்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி

எனைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்குகோர் அரசே
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்,
சரணம் சரணம் சண்முகா சரணம்.